உ

கடவுள் துணை.

# செந்தமிழ்

தொகுதி-கச.] ராக்ஷஸஹு தைமீ [பகுதி-ங

Vol. XIV. January—February, 1916. No. 3.

## ருதுமதிவிவாஹம்.*

"செந்தமிழ்" (தொகுதி கச பகுதி க-ல்) உக-ஆம்பக்கத்தொடர்ச்சி.

### 6. பால்யவிவாகத்தை இப்பொழுது மாற்றவேண்டிய அவசியங்கள்.

காரண மெப்படியிருந்தாலும் வெகுகாலமாக அநுஷ்டிக்கப்பட்டு வந்தவழக்கத்தை நாம் விடும்படியாக இந்தச் சமயத்தில் என்ன அவசியம் நேரிட்டது; நம்முடைய முன்னோர்களைப்போல் நாமும் நடந்துவருவோமே என்று அடுத்தகேள்வியானது உண்டாகிறது.

முன்னிருந்தநிலைமையைவிடச் சிலவருஷங்களாக ஒழுக்கவழக்கங்கள் மாறிக்கொண்டேவருகின்றன. முற்காலத்திற் பிராமணர்கள் உத்தியோகம் வியாபாரம்முதலிய விருத்திகளில் விசேஷமாயில்லாமற் பெரும்பான்மையோர் வியவசாயத்தொழிலை அநுசரித்து, அதில்வந்ததைக்கொண்டு டம்பமானசெலவுகளில்லாமல் மிகுந்த திருப்தியான மனதை உடையவர்களாய்ச் சொற்பச்செலவிற் காலக்ஷேபஞ்செய்துவந்தார்கள். பிராமணன் எவ்வளவு தனிகனுயிருந்தாலும் உடை உணவு முதலியசெலவுகளில் இப்போதுபோல் அவ்வளவு செலவுக்குக் காரணம் கிடையாது. பந்துவிசுவாசமும் தாக்ஷிண்யமும் மிகுதியாயிருந்தன. அவை இப்பொழுது அநேகமாய் இல்லையென்றே சொல்லலாம்.

இக்காலத்தில் ஒருவன் தன்சகோதரியை உன்குமாரனுக்கு என் குமாரத்தியை மணஞ்செய்துகொடுப்பதாக உத்தேசிக்கிறேன், உன்னுடைய சம்மதமென்ன என்றுகேட்டால், அவள் மறுயோசனையில்லாமல் வரதக்ஷிணை என்னதருகிறுயென்று சகஜமாய்த் தன்சகோதரனைக் கேட்கிருள். முற்காலத்திற் பரீக்ஷையைஉத்தேசித்துப் பெண்ணுக்கு மாப்பிள்ளைதேடுகிறவழக்க மில்லை. பரீக்ஷாநிர்ப்பந்தம் கிடையாது. பாந்தவ்யமும் குற்றமில்லாதகுடும்பமா என்பதுந்தான் கவனிக்கப்படும்.

---

* இதைப்பற்றிய பராமர்சம் அடுத்துச் சேர்க்கப்பெற்றிருக்கிறது.

*

பிக்ஷைவாங்குகிற ஏழையாயிருந்தாலும் மேலேகண்ட இரண்டம்சங்களும் ஜாதகமும் ஒத்திருந்தால் உடனே கல்யாணம் நடந்துவிடும். இப்பொழுதுபோல் வலைபோட்டு ஊர்ஊராய்த்திரிந்து மருமகன்தேடுவதும், பிள்ளையின் தகப்பன்மார்கள்வகையரா வரதக்ஷிணைக்கு ஏலம்கூறுவதும் ஆகிய நாகரிகங்கள் அக்காலத்தில் இல்லை. பரீக்ஷைக்குப்படிக்கிறதென்கிற முயற்சியால், தேகத்தின்வலிமையை வெகுவாய்க் குலைத்து, தேகம்இளைத்து கண்இடுங்கி வியாதிமேலிட்டு, அல்பஆயுசாகப்போகிற அநுபவங்கள் முற்காலத்திலில்லை.

பிராமணர்கள், அந்தக்காலத்தில், தேகத்துக்குவலிமையும் நீடித்த ஆயுசும் உண்டாக அதிகாலையிற் குளிர்ந்தஜலத்தில் ஸ்நானம்செய்தல், ஜபதபமுதலிய அநுஷ்டித்தல், ஜீரணக்கருவிக்கு அதிகவேலை கொடுக்காமல் இரண்டுவேளை போஜனம்செய்தல், வயல் தோட்டம்முதலியவைகளுக்குப்போய் வியவசாயத்தைக்கவனித்தல் முதலிய தேகப்பயிற்சியாகிய அநேக நற்பழக்கங்களை அநுஷ்டித்துவந்தார்கள். இப்பொழுது உத்தியோகமில்லாமல் வியவசாயம்மட்டும் அநுஷ்டிக்கிற குடும்பங்களிற்கூட நிலங்களைக் குத்தகை வாரங்களுக்குவிட்டு வியவசாயத்தை நேரிற்பார்க்காமல், பகற்பொழுதை வீண்பொழுதாய்ப் போக்குகிறார்கள். இவற்றால் இப்பொழுது சிலகாலமாக வரதக்ஷிணை மிகுதியாகக்கேட்கும் நிர்ப்பந்தமும், பலகாரணங்களைக்கொண்டு வரவரப் பால்யமரணம் மிகுதியாயிருப்பதால், பால்யத்திலேயே விதவையாகக்கூடிய அபாயமும், அதிகப்பட்டுக்கொண்டுவருகின்றன.

ஒருபெண் ருதுவாவதற்குமுன் கட்டாயம் மணம்செய்துகொடுக்கப்படவேண்டும்; அப்படிச்செய்யாவிட்டால் விசேஷபாபங்களும் அவமானமும் சம்பவிக்கும்; என்பதனால் எப்படியாவது சரியானபரீக்ஷை கொடுத்திருக்கிறவனுக்கு மணம்புரிவிக்கவேண்டுமென்று ஆத்திரப்பட்டு நெருங்கியகாலத்துக்குள், பெண்ணின்தகப்பன் வரன்தேடும்சமயத்திற் பிள்ளையின்தகப்பன் இதைவிட்டால் நமக்குச் சமயம்வாய்க்காதென்ற உத்தேசத்துடன் மிதமிஞ்சி வரதக்ஷிணைகேட்கிறான். ருதுவானபிறகும் கல்யாணம்செய்யலாமென்றாற் பிள்ளையின்படிப்பு நடுவிற் கெடாமலிருக்கவேண்டுமென்ற உத்தேசத்தைக்கொண்டு பிள்ளையின் கல்யாணத்தைத் தாமசிக்கவேண்டுமென்ற அபிப்பிராயமுடைய அநேகர்கள் படித்துத்தேர்ச்சியடைந்தபின் ருதுவில்லாதபெண்ணை மணம்

செய்துகொண்டு காத்திருப்பதைவிட ருதுவானபெண்ணைமணந்து கல்யாணத்தின் உண்மையானதாத்பரியத்தை அநுஷ்டிக்கமிகவும் விரும்புவார்கள்.

இப்பொழுதிருக்கிறஸ்திதியில், பிள்ளைவீட்டுக்காரர்க்குப் பணம் லாபத்தைத்தவிர, ருதுவாகாதபெண்ணை மணந்துகொள்வதில் வேறு லாபம் கிடையாது. பெண் சாந்திமுகூர்த்தகாலம்வரை பிறந்தவீட்டிலேயே இருந்துவருகிறாள். அதேபிரகாரம் பெண்ணின்பெற்றோர்கள் வகையாருக்கும், ருதுவாவதற்குமுன் கல்யாணம்செய்துகொடுக்க வேண்டுமே என்ற பயம்தவிர வேறு யாதொருபிரயோஜனமு மில்லை. அப்படிக்கில்லாமல் ருதுவானபிறகு கல்யாணம்செய்வதாயிருந்தால், படிப்பானபிறகு கல்யாணத்தை அபேக்ஷிக்கிற பிள்ளைவீட்டுக்காரர்களும், ருதுவின்பயம்நீங்கின பெண்வீட்டுக்காரர்களும், புளிப்பேப்பக்காரனும் பசியுடையவனும் சம்பாஷணைசெய்வதுபோல் ஏற்றத்தாழ்ச்சியில்லாமல், சமரசநிலையையடைந்து கல்யாணங்கள், கிரமப்படி உபயதரப்பாராலும் விரும்பப்பட்டுச் சௌகர்யமாக நடக்கலாம்.

ருதுவாவதற்குமுன் ஒருபெண்ணைக் கல்யாணம்செய்துகொடுப்பதில், பெண்ணும் மாப்பிள்ளையும் மனைவி புருஷன் என்கிற ஸ்தானத்தை ஒரு அம்சத்திற்கூட அடையப்பெறாமல் விசேஷ பணச்செலவுசெய்து பந்துக்கள் ஊரார்முதலியவர்களுக்கு அன்னம்போட்டுப் பிள்ளைவீட்டுக்காரர்களுக்கு மிகுதியான வரதக்ஷிணை பாத்திரங்கள் கல்யாணப் பரிசுகள்முதலிய உபசாரங்கள்செய்யப்பட்டு, அந்த வேடிக்கைத்திருவிழாநடந்தபின் பெண் முன்போலப் பிறந்தவீட்டிலேயே இருக்கிறாள். பிள்ளை இரட்டைப்பூணூல்தரித்துக்கொண்டு பிர்ம்மசாரி அநுஷ்டிக்க வேண்டிய வித்தியாப்பியாசத்தையே அநுஷ்டித்துவருகிறான். வேறு ஒருவித்தியாசமும் இல்லை. இருவரும் க்ஷேமமாயிருந்தால் மேற்கண்டபடியிருந்தாலும் பாதகமில்லை. அப்படிக்கில்லாமல் மானிடவாழ்வுக்கு ஏதாவது பங்கம்நேரிட்டால், மேற்கண்டசெலவுகளெல்லாம் ஒரு பிரயோஜனமுமில்லாத செலவுகளாய்ப்போவதுடன் அந்தப்பெண்ணானவள் எவ்விதத்திலும் மனைவியாக இருந்திராவிட்டாலும் விதவை எனப்பட்டு, ஆயுசுபரியந்தம் உள்ள துன்பங்களுக்குமட்டும் பாத்தியப்பட்டவளாக ஏற்படுகிறாள்.

இது; மனிதஇயற்கைக்கும் ஜீவகாருண்யத்துக்கும் முழுதும்விரோதமானவிஷயமென்பது, ௸ நிர்ப்பந்தத்தில் அகப்படாத இதரதேசத்தார்களுக்கும் ஜாதியார்களுக்கும் நன்றாய்த்தெரிகிறது. ஆனால் நீடித்த வழக்கமென்று அநுஷ்டித்துவருகிற நமக்கோ கிரமமாகத் தோன்றுகிறது.

பெண் ருதுவானபின் கல்யாணம்செய்யும்பக்ஷத்தில், அது வாஸ்தவமானகல்யாணமாகி, பெண்ணானவள் தான் மனைவி என்றும், தனக்கு மாலையிடுபவன் புருஷனென்றும் ஒருதினத்திலாவது அறிகிறாள் என்கிற திருப்தியோடு, சிலநாள் சேர்ந்துவாழ்ந்து பிறகு புருஷன் இறந்தாலும், ஆயுசுவரை ஏற்படக்கூடிய துக்கத்துக்கு ஆறுதலாக ஒரு புத்திரனையாவது ஒருபுத்திரியையாவது அடையலாம் என்கிற ஒரு திருப்தியுமிருக்கிறது. ருதுவாவதற்குமுன்செய்யப்படுகிற பால்யவிவாகமும், அதன்காரணமாக ஏற்படக்கூடிய பால்யவைதவ்யமும், வரதக்ஷிணையின் கொடுமையும் குறைய, பத்னி என்கிறபெயரையும் கொஞ்சகாலமாவது வாஸ்தவமாகவகித்து, மாதாவாக ஏற்படக்கூடிய நிலைமையையும் சிலகாலமாவதடைந்து, அநுபவித்து, அப்பால் அவர்கள் விதவையானால் அது தெய்வச்செயல். ஏனென்றால் விதவைக்கு மறுவிவாகம் செய்யக்கூடாதென்று நம்முடையசாஸ்திரங்களும் வழக்கமும் ஒருமுகமாயிருக்கின்றன.

ஆதலால் மனுஷனுக்கு ஏற்படக்கூடிய துன்பத்தில் மனுஷனுடைய முயற்சியினால் எவ்வளவுதூரம் கூடுமோ அவ்வளவுதூரம் தர்மத்துக்கு விரோதமின்றி ஏன் துன்பங்களை விலக்கிக்கொள்ளக்கூடாது. தவிரவும், பெண் ருதுவாவதற்குமுன் கல்யாணம்செய்யவேண்டிய அவசியத்தினால் தாக்ஷிண்யத்தின்பேரிலும் பாந்தவ்யத்தினாலும் சிறுபிள்ளைகளுக்கும் கல்யாணம்செய்யும்படிநேரிடுகிறது. சிலபிள்ளைகளின்பெற்றோர்கள் வரதக்ஷிணைக்குஆசைப்பட்டுத் தங்கள்பிள்ளைகளுக்குச் சிறுவயதிலேயே கல்யாணம்செய்விக்கிறார்கள். ௸ காரணங்களினால் ௸ பிள்ளைகளினுடைய படிப்புக் கெட்டு, அவர்களுடையதேகத்துக்கு வியாதியும் பலக்குறைவும் உண்டாகின்றன.

## 7. ப்ரௌடாவிவாகத்துக்குச் சொல்லப்பட்ட சில இதர ஆக்ஷேபணைகள்.

ப்ரௌடாவிவாகம் செய்வதற்குச் சில அவசியங்களும் நியாயங்களும் ஏற்பட்டிருப்பது வாஸ்தவமென்று வைத்துக்கொண்டாலும் அதனால் ஏற்படும் கெடுதல்கள் அதனாலுண்டாகக்கூடிய நன்மைகளுக்கும் மேற்பட்டதென்றும், ஆதலால் அது கூடாதென்றும் புராதனவழக்கக்காரர் அநேகர் ஆக்ஷேபிக்கிறார்கள். அதாவது:—

(1) பெண் ருதுவானபிறகு கல்யாணம்செய்வதாயிருந்தால், அவள், இந்திரியங்கள்சம்பந்தமான வெளித்தோற்றங்களையே முக்கியமாக மதித்து, அந்தநோக்கத்துடன் மற்றமுக்கியமான அம்சங்களிற் குறைந்த புருஷனையும் மணம்புரியவிரும்புவாளென்பதும், அதைத்தடுக்கப் பெற்றோர்களுக்குச் சாத்தியப்படாதென்பதும், அதனால் துன்பங்கள்விளையுமென்பதும் ஒரு ஆக்ஷேபணை.

(2) பெண் ருதுவானபிறகு கல்யாணஞ்செய்யாமல் தகப்பன் வீட்டில் 2, 3 வருஷங்கள் இருக்கும்பக்ஷத்தில் அதனால் ஒருக்கால் அபக்யாதி ஏற்படக்கூடுமென்பதும், அதனால் அவளுக்கு விவாகமேயாகாமற்போய்விடக்கூடும் என்பதும் 2-வது ஆக்ஷேபணை.

ஷை 2 ஆக்ஷேபணைகளுக்கும் சரியான ஆதரவு இல்லை. ஏனென்றால், நம்முடைய தேசத்துப்பெண்களெல்லாரும் கோஷாவாக இல்லாவிட்டாலும், பரபுருஷர்களுடன் தனித்திருக்கக்கூடாது; சரியானபந்துக்களாயிருந்தாலொழியப் பரபுருஷர்களுடன் சம்பாஷிக்கக்கூடாது; பரபுருஷர்களுடன் கைலாகுகொடுத்தல்முதலிய எவ்வித சம்பந்தமும் கூடாது; தன்வீட்டைவிட்டு அயல்வீடுகளுக்கு அவசியமின்றி அடிக்கடிபோகக்கூடாது என்பவைமுதலிய சாவதானங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவைகள் நீங்கலாகப் பெற்றோர்கள் முதலியோருடைய பொதுவானகாப்பும் ஒரு பெண்ணினுடைய இளம்வயதில் எப்பொழுதும் அவசியமாகத்தானிருக்கிறது. "காவலுனே பாவையர்க்கழகு" என்று ஔவையாரும் கூறியிருக்கிறார்.

இப்படிப்பட்ட சாவதானங்களுக்குமீறி ஒரு ருதுவான பெண் நடப்பதாயிருந்தால், அவள் கல்யாணம் ஆனவளாயிருந்தாலும் அல்லது ஆகாதவளாயிருந்தாலுமபவாதம் எப்படியும் ஏற்படக்கூடியதுதானே.

அந்த அபவாதத்துக்கு அவளுக்குக் கல்யாணமாகாதது காரணமல்ல. அவளுடைய தவறுதலான தீய ஒழுக்கமே காரணம். பொதுவாக, மேற்கண்ட பாதுகாப்புக்களுக்குள்ளடங்கிய ஒரு ருதுவானபெண்ணானவள், நல்லபுத்தியுடையவளாகவும், பெற்றோர்களுடைய புத்திமதிகளில் நம்பிக்கையும் கீழ்ப்படிதலுமுள்ளவளாகவும், கிரமமானவழிகள்தப்பிநடக்க வேண்டிய தூண்டுதல்கள் இல்லாதநிலைமையி லிருப்பவளாகவும் இருக்கிறாளே ஒழிய வேறில்லை.

ருதுவாவதற்குமுன் கல்யாணமாகி ருதுவானபிறகு ஒருவருஷம் முதல் மூன்றுவருஷங்கள்வரை ருதுசாந்திசெய்யப்படாமல், பெண்கள் தகப்பன்வீட்டிலிருந்துவருகிறார்கள். அவர்களுக்குக் குற்றம் யாதொன்றும் ஏற்பட்டதாய் இல்லை. கல்யாணம் ஆகாமலிருந்தால்மட்டும் ருதுவானபெண்களுக்கு ஏன் குற்றங்கள் கற்பனைசெய்யப்படவேண்டுமோ தெரியவில்லை.

இதனடியில் 3-வது ஆக்ஷேபணையிற் கண்டிருக்கிறபடி இந்திரிய சுகமே அறியாத பெண்ணானவள், மனசிற் களங்கமில்லாதவளாகவே இருக்கவேண்டுமல்லவா. ருதுவானபிறகு மனசும் தேகமும் பக்குவமடைந்து வெகுநாளாகியும், விவாகம்செய்யப்படாமலும் இருந்தும், பல புருஷர்களுடன் தனித்திருப்பதும், அவர்களுடன்பேசுவதும், கைலாகு கொடுப்பதும், சிரிப்பதும், பெற்றோர்களுடைய நிர்ப்பந்தமின்றிச் சிறுவயதிலேயே இஷ்டப்படி காற்றுலாவப்போவதும், நாடகம்பார்க்கப் போவதும், பரபுருஷர்களுடன் ஓரேபள்ளிக்கூடத்திற் படிப்பதும், நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்ற பெண்களுக்குள்ள நான்குநற் குணங்களையும் ஒழித்து, சுயேச்சையாய்ச் சஞ்சாரஞ்செய்வதும் ஆகிய இந்தவழக்கங்களுள்ள பிறஜாதிப்பெண்களுக்குள்ளும் எவ்வளவோ உத்தமிகளிருக்க அப்படிக்கில்லாமல் அநேகவிதமான கட்டுப்பாடுகளுக்குள் அடங்கியிருக்கிற நம்முடையதேசத்தில் ருதுவான ஒரு பெண்ணுக்குக் கல்யாணமாகாமலிருந்தால்மட்டும் அபவாதமும் துர்நடத்தையும் ஏற்படுமென்கிறபயத்துக்கு யாதொருகாரணமுமில்லை. இவ்வளவு பாதுகாப்பையும் மீறி அவள் அபவாதத்துக்குப் பாத்திரமாகும்பக்ஷத்தில் அவளை முன் ஒருவன் மணம்செய்திருந்தாலும், மணம்செய்யாமலே இருந்தாலும் வித்தியாசமிருப்பதாக எனக்குத் தோற்றவில்லை.

தங்கள்பெண்களை ருதுவானபிறகு கல்யாணம்செய்துவருகிற பிராமணரல்லாத இதரவகுப்பார்களிற்சிலர், ப்ரௌடாவிவாகம்செய்வதிற் சில அசௌகர்யங்களுள்ளனவென்றும், பிராமணர்கள் பழையவழக்கத்தை மாற்றுவது சரியல்லவென்றும் பத்திரிகைகள் மூலமாக எச்சரிக்கைசெய்துகொண்டுவருகிறார்கள். ஆனால் அந்தவகுப்பார்களுக்குள், பொதுவாக ஸ்திரீகள் பிராமணஸ்திரீகளைப்போலக் கௌரவமாகவும் ஸ்திரீகளுக்குரிய நாணம் முதலிய சன்மார்க்கங்களையுடையவர்களாகவும் இருக்கிறார்களே யொழிய, ப்ரௌடாவிவாகத்தினுற் குறைவுள்ளவர்களாயிருக்கிறார்கள் என்று சொல்லமுடியாது.

ஒரு ருதுவானபெண், தாய்தகப்பன் புத்திமதியைக்கேளாமல் இந்திரியவெளித்தோற்ற மயக்கங்களுக்குட்பட்டு யோக்யனல்லாதபுருஷனை மணஞ்செய்துகொள்ள ஆக்ஷேபித்தால், அதற்கு ப்ரௌடாவிவாகம் காரணமல்ல. அவளுடைய தீயசுபாவமும், நற்பழக்கமில்லாமையும், வழிதப்பிப்போகும்படி தூண்டக்கூடியவிஷயங்களிலிருந்து அவளைப் பாதுகாக்கும்படியான மேலேசொன்ன சாதனங்களில்லாதிருத்தலுமே காரணமாம்.

ஆதியில், பெண்களின் கல்விவிஷயத்துக்கு இதேமாதிரியான பல பல ஆக்ஷேபணைகளைச் சொல்லிவந்தார்கள். கல்வி என்னும் வெளிச்சமானது புருஷர்களுக்கு எப்படி அவசியமோ அப்படியே ஸ்திரீகளுக்கும் அவசியமென்று இப்பொழுது அநேகமாய் எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. வெளிச்சத்தின் ஆதரவைக்கொண்டு, ஒரு மனுஷனாவது ஸ்திரீயாவது தப்புவழியில் நடக்க எத்தனப்பட்டால் அதற்கு வெளிச்சம் காரணமல்ல. அவர்களுடைய துர்ப்புத்தியே காரணம். பரஸ்திரீயை ஒருவன் கெட்ட எண்ணத்துடன்நோக்கினால் அதற்கு அவனுடைய கெட்டசுபாவம் காரணமேயல்லது கண்பேரில் குற்றம் சொல்லலாமா.

அந்த இதரஜாதியார்களுடைய எச்சரிக்கையை ஒரு பெரிய ஆதரவுபோல் நம்மவர்கள் எடுத்துப் பேசுகிறார்கள். எந்தவிஷயத்துக்கும் விலக்கைவைத்துக்கொண்டு வற்புறுத்திப்பேசி ஆக்ஷேபணைசெய்யலாம். அதனால் நாம் பீதி அடையக்கூடாது.

(3) ருதுவாவதற்குமுன் கல்யாணம்செய்யப்பட்ட ஒருபெண் சாந்திமுகூர்த்தம் ஆகாமலே விதவையாய்ப்போய்விட்டால் அவள் இந்

திரியசுகத்தின் நிலைமையை யறியாதவளாகையால், மனசினலும் தேகத்தினலும் பாவத்தைச் செய்யாமலிருந்துவிடுவாளென்பதும், ருதுவான பிறகு அவளுக்குக் கல்யாணம்செய்து அதன்பேரில் விதவையாவதாயிருந்தால், இந்திரியசுகத்தை ஒருவாறுதெரிந்து பிற்பாடு அடையப் பெறுததால் அதைச் சிந்தித்துக்கொண்டு மனசினலும் தேகத்தினலும் பாவம்செய்வதற்கு ஏதுவாகுமென்பதும் 3-வது ஆக்ஷேபணை.

இது மிகவும் விநோதமான ஆக்ஷேபணையாயிருக்கிறது. ருதுவாவதற்குமுன் கல்யாணமாய்ச் சாந்திமுகூர்த்தம் ஆவதற்குள் விதவையாகப்போகும்பெண்கள், சாந்திமுகூர்த்தத்திற்குப்பின் பலவயதுகளில் ஏற்படும் விதவைகளைவிட மிகவும் சொற்பம். காமவிகாரத்தின்சங்கதியை அறிந்திருந்தாலும், அல்லது அறியாவிட்டாலும், அப்பியாசத்தினலும் நற்பழக்கத்தினலும் தெய்வபக்தியினலும் அபவாத பீதியாலும் விதவைகள் நல்லவழியில்நடக்கிருர்களென்ற வாஸ்தவமும் பெருந்தன்மையுமான வியவகாரத்தைவிட்டுவிட்டு, ருதுசாந்திக்குமுன்விதவையாய்ப்போனவளுக்குக் கிரமமாயிருக்க ஏதோ விசேஷ சௌகர்யமிருக்கிறதென்றும், இந்திரியசுகம் அறிந்தவள் வழிதப்பிப்போவாளென்றும் பேசுகிறவியவகாரம் கொஞ்சமேனும் நியாயமில்லை. பிரத்தியக்ஷ அநுஷ்டானத்துக்கும் விரோதமாயிருக்கிறது.

14,15 வயதுமுதல் 50 வயதுவரை ருதுசாந்தியானபிறகு விதவைகளாய்ப்போனவர்கள்ஆயிரக்கணக்காயிருக்கிருர்களே. அவர்களுடைய மன ஒழிவுக்கும் வைராக்கியத்திற்கும் அடக்கத்துக்கும் ஆக்ஷேபணைக்காரர் என்னகாரணம் சொல்லுவாரோ தெரியவில்லை.

ஒருசாமான் இன்னதென்றே தெரியாதிருந்தாலும் அதை அநுபவிக்கும்படியான சக்தியும் எண்ணமும் உள்ள ஒருவன் இருந்தால் அவனுக்கு அநுபவம் செய்தவனைவிட அதில், பிரமை அளவுக்குமேல் இருக்கும் என்றுகூட வியவகரிக்கலாம்.

ஒவ்வொருவருடையநன்மைகளுக்கும் ஒருதரமாவது ஒரு வஸ்துவினிடத்தில் உள்ள ருசியை அறிவது அல்லது அறியாதிருப்பது காரணமல்ல என்றும், அவர்களுடைய மனத்தூய்மையும் நற்பழக்கமும், நல்ல சகவாசமும் தெய்வபக்தியும் காரணமாயிருக்கின்றனவென்றும், நான் நினைக்கிறேன். (இன்னும் வரும்.)

M. R. ஸ்ரீநிவாஸையர்,
பெரியகுளம்.

ஸ்ரீ:

# ருதுமதீவிவாஹ பராமர்சம்.

இதற்குமுன்பாகவைக்கப்பட்டிருக்கும் ருதுமதீவிவாஹம் என்னும் வியாசத்துள், கந்யாவிவாஹத்தைமாற்றவேண்டியதற்காகக் காட்டியிருக்கும் காரணங்களாவன:—

(1) வரதக்ஷிணை அதிகப்பட்டுவருவதைப் போக்கலாமென்பது.

(2) பிள்ளைகளின்படிப்புக்கிருக்குமிடைஞ்சலைத் தீர்க்கலாமென்பது.

(3) ருதுகாலம்வந்துவிடுமென்ற பயத்தினால், தக்கவரனைத்தேடி விவாஹம்செய்விக்க மார்க்கமில்லாதிருப்பதை நீக்கலாமென்பது.

(4) புருஷர்களின் பால்யவிவாகத்தை நிவிர்த்திக்கலாமென்பது.

(5) பிள்ளைகளுக்குக் கல்யாணமாகும்பொழுதே அநுபவயோக்கியமில்லாதிருப்பதைமாற்றி, அநுபவயோக்கியமாயிருக்கச்செய்வது.

(6) எல்லாருக்கும் பரமதுக்ககரமாயிருக்கும்கந்யாவைதவ்யத்தை இல்லாமற்பண்ணலாமென்பது. என்னு மிவைகளே!

இவற்றுள் (1) வரதக்ஷிணையை ஒழிப்பதற்கு ருதுமதீவிவாஹம் சாதகமென்றுசொல்வது பொருத்தமில்லையென்று தோன்றுகிறது. ஏனென்றால் வரதக்ஷிணைகொடுப்பவர்களின்தொகை மிகக்குறைவாயும், அது கொடாதவர்களின்தொகையே மிகுதியாயுமிருப்பதால், குறைந்த எண்ணிக்கையுடையவர்களின்விருப்பப்படி ஜனஸமூகத்தைத்திருத்துவது யுக்தியுக்தமன்று. அன்றியும், வரதக்ஷிணைகொடுப்பவர்களுக்குக் கந்யாவிவாஹம் நஷ்டமுண்டாக்குகிறதென்றுசொல்லவும் இடமில்லை. எப்படியென்றால், ஒருவர் தம்பெண்கல்யாணத்தில் மாப்பிள்ளைக்கு வரதக்ஷிணைகொடுத்தால், அவருக்கே தம்பிள்ளைகல்யாணத்தில் வரதக்ஷிணை கிடைப்பதாயிருப்பதால், அதை அவர்கள் அதற்கு ஈடுசெய்துகொள்ளக்கூடுமாகையால், கந்யாவிவாஹத்தால் அந்தநஷ்டமுண்டாகிறதில்லையென்றே சொல்லலாம். வரதக்ஷிணைக்குத்தக்க கௌண்யமுள்ளவரனை விரும்புவோர்கள் கந்யாவிவாஹம்செய்தாலும்சரி, ருதுமதீவிவாஹம்

செய்தாலும்சரி; திருப்தியுடன் வரதக்ஷிணைகொடுக்கக் கடமைப்பட்டவர்களாகவேயிருக்கிறார்கள். ஏனென்றால், தாகந்தீர்க்கும் ஒரேசுபாவமுள்ளதண்ணீரில் முதல்வகுப்பான பனிக்கட்டியுண்ணவிரும்புவோர் அதிகவிலைகொடுப்பதுபோலவே, முதல்வகுப்பு மாப்பிள்ளைகளைத்தேடுமவரும் வரதக்ஷிணைகொடுக்கச் சித்தமாயிருப்பார்களென்றே நினைக்கவேண்டியிருக்கிறது. ஆகையால் ருதுமதீவிவாஹம் வரதக்ஷிணையை மாற்றுவதற்குச் சாதகமாகுமென்று தோன்றவில்லை.

(2) கந்யாவிவாஹம் பிள்ளைகளின்படிப்புக்கு இடைஞ்சலாயிருக்கிறதென்பதை யோசிப்போமானால், படிக்கும்பொழுதேசெய்துகொள்ளும்கல்யாணம் எதுவும் படிப்புக்கு இடைஞ்சலாகுமென்பதில் ஆக்ஷேபமில்லை. படிப்பைமுடித்துக்கொண்டுதான் கல்யாணம்செய்யவேண்டும் என்னும் நம் முன்னோர்வழக்கத்துக்கு எந்தக்கல்யாணமும் விரோதமாகிறதில்லை. அவ்வழக்கத்தை நாம் விலகிச்செல்லுதலால் இக்காலத்து இருவகைக்கல்யாணங்களும் படிப்புக்கு இடைஞ்சலாயிருக்கின்றன. அவற்றுள், படிப்பின்மத்தியிற்செய்யும் கந்யாவிவாஹத்தைக்காட்டிலும், படிப்பின்மத்தியிற்செய்யும் ருதுமதீவிவாஹமே படிப்புக்கு உடனே பிரதிபெந்தகமாயிருக்குமென்பது யாவராலும் அறியத்தக்கது. இவ்விஷயத்தில், பிள்ளைகளுக்குப் படிப்புமுடிவதற்குள், கல்யாணஞ்செய்யும் துர்வழக்கத்தையொழித்துச் சாஸ்திரசம்மதமான பழையவழக்கத்தைக் கைக்கொள்ளுவதே சிலாக்கியமாகுமென்று தோன்றுகிறது. ஆகையால் ருதுமதீவிவாகத்திற் பிரவர்த்திப்பதைக் காட்டிலும், மைனராயிருக்கும்பிள்ளைகளுக்குக் கல்யாணஞ்செய்யக்கூடாதென்று சட்டம்செய்துகொள்ள முயல்வோமானால் அதுவே சிறந்த ஆசாரத்திருத்தமாகுமென்று எல்லாராலும் கொள்ளத்தக்கதாயும் நியாயமாயுமிருக்கும்.

(3) கந்யாவிவாஹத்தில் ருதுகாலம்வந்துவிடுமென்ற பயத்தினால் தக்கவரனைத்தேடிக் கல்யாணஞ்செய்விக்கப் போதுமானசாவகாசமில்லையென்பது சிறிது யோசிக்கத்தக்கதுதான். ஆனால், கந்யாவிவாஹத்தில் எட்டுவயதிலிருந்து பன்னிரண்டுவயதுவரை (அதாவது ருதுகாலத்தளவு) சற்றேறத்தாழ ஐந்துவருடங்களில் தக்கவரன்கிடையாதவர்களுக்கு ருதுவானபிறகு மூன்றுவருடத்துக்குள், தக்கவரன் கிடைக்கக்கூடுமென்று தோன்றவில்லை. ஆகையால் ருதுவாய் மூன்றுவருடத்துக்குள், கட்டாயம் கல்யாணமாகவேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லாமலே

ருதுவாய் ஐந்துவருடம்வரை கல்யாணஞ்செய்துகொள்ளலாமென்று, சாவகாசம் கொடுக்கவேண்டியதாயிருக்கிறது. ஐந்துவருஷமென்று ஒரு நிபந்தனையேற்படுத்திக்கொண்டாலும் அந்த நிபந்தனைப்படி ருதுவான ஸ்திரீகளை மேற்பார்த்துப் பரிசோதிக்கும் அதிகாரம் ஒருவருக்குமில்லாமையால், கூடவே இரண்டுமூன்றுவருஷங்கள் தள்ளவும் கூடும். புதியநாகரிகவிருத்தியாலும் கல்வியறிவாலும் மேஜராய்விடுவதாலும் சிலபெண்கள் மேலானவரனில்லையென்று மேல்நாட்டார்போலக் கல்யாணஞ்செய்துகொள்ள இஷ்டமில்லாமலேயிருந்தாலும் இருக்கவும் இடங்கொடுப்பதாயுமிருக்கும். அன்றியும், பெண்கள் எல்லோருமே தக்கவரனைவிரும்புமாசையுடையவர்களாயிருப்பாராகையால் பெண்களுக்குக்கல்யாணஞ்செய்து தீரவேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லாதபக்ஷத்தில், தக்கவரன்கிடையாமல் அநேகம் பெண்களும், பெண்களிணங்காமையால் அநேகம்புருஷர்களும் கல்யாண மில்லாதவர்களாகவே காலந் தள்ளவேண்டியவராவார்கள். ஆகையால், பெண்களுக்குக் கல்யாணஞ் செய்தேதீரவேண்டுமென்னும் நிர்ப்பந்தமுள்ளவரை மேலானவரனைத் தேடிக் கல்யாணம்செய்வதற்கு ருதுமதீவிவாகமும் சாதகமாகமாட்டாதென்று தோன்றுகிறது.

(4) புருஷர்களின் பால்யவிவாஹத்தை நிவிர்த்திக்கலாம் என்பதை யோசிப்போமானால், புருஷர்களுக்குக் கல்யாணவயசைக் கொஞ்சம் தள்ளிவைத்துக்கொள்ளக்கூடுமென்றுதோன்றியபோதிலும், பதினெட்டுவயதுள்ள ருதுவானபெண்ணை அதேவயதுள்ள புருஷன் கல்யாணஞ்செய்யக்கூடாதென்றுவிலக்க மார்க்கமில்லாமையால் அது பலபர்யவஸானத்தாற் பால்யவிவாஹ பர்யாயமாகவேயிருக்கிறது. அன்றியும், ருதுமதீவிவாஹத்தைக்கைக்கொண்டிருக்கும் சிலஜாதியார்களில் மைனராயிருக்கும் பிள்ளைகளுக்கு மைனராகச் சிலபுத்திரர்களிருப்பதாகக் கோர்ட்டுவியவகாரங்களி லங்கீகரிக்கப்பட்டிருப்பதால், கேவலம் ருதுமதீவிவாஹமே பால்யவிவாஹத்தை மாற்றுமென்றுகொள்வதற் கிடமில்லாதிருக்கிறது. பிள்ளைகளின்படிப்பை முடித்துக்கொண்டு செய்யும் கந்யாவிவாஹமானது, புருஷர்களின் பால்யவிவாஹத்தாலுண்டாகுந் தீமைகளைச் சிறிது போக்கவல்லதாயிருக்கிறது. புருஷர்களின் பால்யவிவாஹமாவது சரிவயதுள்ளபெண்ணைக் கல்யாணம்செய்வதாம். அதனால் என்னதீமையென்றால், பெண்கள் 40-வயதுக்குள் விஷய

நிவிர்த்தியையும், புருஷர்கள் 60-வயதுவரை விஷயசாபல்யத்தையும் உடையவர்களா யிருப்பதாலும், பெண்களுக்குப்போலப் புருஷர்களுக்குப் பரத்தமை பிரபலதோஷமாகக் கொள்ளப்படாதிருப்பதாலும் 40 வயதுப்புருஷர்கள் பெரும்பாலார் சரீரபாதையால் துர்வ்யாபாரத்திற் பிரவிர்த்திக்கிறார்கள். வயதுசென்ற அவரது துர்நடத்தைகண்ட வயதுள்ள அவர்பிள்ளைகளும் அவருக்கடங்கிநடவாது மனஞ்சென்றவாறு செல்லுதலே குலதர்மமாகமதித்துத் துர்நடத்தையுடையவராகிறார்கள். அப்பொழுது பிள்ளைகளைக் கண்டித்து நல்வழியிற்செல்லச் செய்யத் தகப்பன்மார் வாயில்லாதவராகிறார்கள். அதனால் அவர் குடிவாழ்க்கைக்கே கேடுண்டாகத்தக்கதாயிருக்கிறது. படிப்பை முடித்துக் கொண்டுசெய்யும் கந்யாவிவாஹத்தில், பெண்ணின்வயதிலிருந்து பிள்ளை வயது 10-னுக்குமேல் வித்தியாசமேற்படுமாகையால், சந்ததியை நல்வழிப்படுத்தப் பிதா யோக்கியதையுள்ளவனாயிருக்க மார்க்கமிருக்கிறது.

(5) பிள்ளைகளுக்குக் கந்யாவிவாஹத்தில், கல்யாணகாலத்திலேயே அதன்பயனையனுபவிக்க மார்க்கமில்லாத குறைதீர்ப்பதைப்பற்றி யோசித்தால் ஒருவிதத்தில் ருதுமதீவிவாஹகக்ஷியானது பிள்ளைகளுக் கனுகூலமாயும், கந்யாவிவாஹகக்ஷியானது பெண்களுக்கு அனுகூலமாயுமிருக்கின்றன. எப்படியென்றால், ருதுமதீவிவாஹத்தில், பெண்கள் அநுபவயோக்கியமான காலங்களைக் கல்யாணமாகும்வரை சற்றேறத்தாழ மூன்றுவருஷம் இழக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள். கந்யாவிவாஹத்தில் அவர்கள் அந்தக்காலத்தை வியர்த்தமாக்கிக்கொள்ள வேண்டியது அவசியமில்லை. ஆகையால் இவ்விஷயத்தில், பரத்தமைக் குரியரல்லாதபெண்களுக் கநுகூலஞ்செய்வதைவிட்டு அதற்கு விபரீதமாகப் புருஷர்களுக்கு அநுகூலம்செய்யும் ருதுமதீவிவாஹம் நியாயமற்றதாயிருக்கிறது. மற்றொருவிதத்தில் இருவருக்குமே யநுகூலமில்லாதிருக்கிறது. எப்படியென்றால், பிள்ளைகள் படித்து முடித்துவரச் சற்றேறத்தாழ இருபத்திரண்டுவயது சென்றுவிடுகிறது. அதன்பிறகு உடனே ருதுமதியைக் கல்யாணம்செய்துகொள்பவன், தனக்கு ஜீவனோபாயமான ஒருவேலையை ஓடியாடித்திரிந்து திறப்படுத்திக்கொண்டு குடிவாழ்க்கைக்குவேண்டிய சௌகரியம்செய்துகொள்ளப் பின்பும் ஒரு மூன்றுவருடம்வேண்டியிருப்பதால் அதுவரை இருவருக்கும் திருப்திகரமான சமாகமமில்லாமற்போகிறது. கந்யாவிவாஹத்தில் இப்படிக் கஷ்டமுண்டாக இடமில்லையென்றுதோன்றுகிறது.

(6) இனிப் பால்யவைதவ்யத்தை ருதுமதீவிவாஹத்தால் மாற்றலாமென்பதைப்பற்றி யோசிப்போம். பால்யவைதவ்யமென்பது இரண்டுகக்ஷியிலுமுள்ள எல்லாராலும் பரிதபிக்கத்தக்கதே. அது ருதுவானபின்பும் முன்பும் இப்போதுள்ளவழக்கத்திற் சம்பவிக்கக்கூடியதாயிருக்கிறது. ருதுவானபின்புண்டாகக்கூடியதைத் தெய்வச்செயல் என்று இரண்டுகக்ஷியாரும் சகித்துக்கொள்ள இசைவுடையவர்கள் என்பதில் ஆக்ஷேபமில்லை. கந்யாவிவாஹகக்ஷிமட்டும் கந்யாவைதவ்ய துக்கத்தையும் அதிகமாகச் சஹிக்கவேண்டியதாயிருக்கிறது. ருதுமதீ விவாஹகக்ஷியானது, இந்தக் கந்யாவைதவ்யத்தையும் அதனாலுண்டாகும் துக்கத்தையும் தோன்றவொட்டாமலடிக்குஞ் சாமர்த்தியமுடையதென்பது ஒவ்வொருவரும் சொல்லாமலே தெரிந்துகொள்ளத்தக்கது. ஆதலால் இந்த ஒருவிஷயத்தில்மட்டும் ருதுமதீவிவாஹகக்ஷி ஜெயமுடையதாயிருக்கிறதென்பது யாராலும் மறுக்கத்தக்கதன்று. ஆகையால், கந்யாவைதவ்யத்தைப்போக்குவதாகிய பிரயோஜனத்தைமட்டும் நோக்கும்போது ருதுமதீவிவாஹகக்ஷி எல்லாராலும் ஆதரிக்கத்தக்கதென்றே தோன்றுகிறது. ஆனால் இது அறிவால் மிக்கோர்களால் வெகுகாலமாய்க்கைக்கொள்ளப்பட்ட ஜனசமூகத்தின் ஆசாரத்தை மாற்றுவதாயிருப்பதால், இவ்விஷயத்தில் யோசிக்கவேண்டியவிஷயங்களையெல்லாம் நன்றாய் யோசித்துத்தீரவேண்டும். அப்படி யோசித்து முடித்துக்கொண்டு மாற்றவேண்டியதாயேற்பட்டுவிட்டால் முன்னோர் எவ்விதமாகப் பூர்வாசாரங்களைக் காலாநுகுணமாக மாற்றியிருக்கிறார்களோ அந்தமுறையில்நின்றே நாமும் மாற்றிக்கொள்ளவேண்டியவர்களாயிருக்கிறோம்.

## யோசிக்கவேண்டியவிஷயங்கள்:—

(1) நம் முன்னோர்கள் கந்யாவிவாஹம் இவ்விதமான துக்கசம்பவத்துக்கு இடமுள்ளதென்பதை அறியாதவர்களா?

(2) அறிந்திருந்தால் அவர்கள்சந்ததியாராகிய நமக்கு என்ன அநுகூலத்தைக்கருதி இந்தக்கஷ்டத்தைவஹிக்கும்படிசெய்திருக்கிறார்கள்? கந்யாவைதவ்யமென்பதென்ன? ருதுமதீவைதவ்யமென்பதென்ன? இவ்விரண்டுக்குமுள்ளவித்தியாசங்களென்ன? அவை உண்மையாகவே ஸஹிக்கத்தகாதனவா?

(3) விவாஹநிபந்தனமேற்பட்ட முற்காலத்தில் முதலிலிருந்தது கந்யாவிவாஹமா? ருதுமதீவிவாஹமா?

(4) ஆதியிலுள்ளது ருதுமதீவிவாஹமாயிருந்தால் அது எல்லார்க்கும் அநிஷ்டமான கந்யாவிவாஹமாய் மாறுவதற்கான தக்ககாரணங்களென்ன?

(5) இப்போது கந்யாவிவாகத்தைமாற்றுவதற்கு பிராமண சமுதாயத்தில் இதுவரையில்லாத புதியகாரணங்களென்ன?

(6) தக்ககாரணங்களைக்கொண்டு முன்னோர்கள் பூர்வாசாரங்களை எந்தவிதமாய் மாற்றிவந்திருக்கிறார்கள்? அவர்கள் ஆசாரங்களை அநுஷ்டானத்துக்குக் கொண்டுவந்தவழிகளெவை?

(7) நாம் இப்போது எந்தவழியாக அநுஷ்டானத்துக்குக் கொண்டுவரவேண்டும்?

என்பன முதலியனவாக இன்னும் மேதாவிகளால் விசாரிக்கத்தக்கனவாகத்தீர்மானிக்கப்படும் இஷூக்களையேற்படுத்திக்கொண்டு, அவற்றையெல்லாம் ஸவிஸ்தாரமாய்விசாரித்து உண்மைதெரிந்துகொள்ளாது மேலெழுந்தபடி சிலருக்குத்தோன்றும் அநிஷ்டங்களைமட்டுங் கண்டு ஸஹிக்கமாட்டாமல் பூர்வாசாரத்தைக் கைவிடுவதானது காமசாரமாகுமேயல்லது நெறிமுறையாகுமென்று தோன்றவில்லை.

---

7. "ப்ரௌடாவிவாஹத்துக்குச் சொல்லப்பட்ட சில இதர ஆக்ஷேபணைகள்" என்ற தலைப்பின்கீழ்ச்சொல்லும் ஆக்ஷேபங்கள் துர்ப்பலமாயும் சமாதானங்கள் பெரும்பாலும் அங்கீகரிக்கத்தக்கனவாயுமிருக்கின்றன. ஆயினும் "தங்கள்பெண்களை ருதுவானபிறகு கல்யாணம் செய்துவருகிற பிர்மணரல்லாத இதரவகுப்பார்கள்சிலர், பிரௌடாவிவாஹம்செய்வதிற் சில அசௌகர்யங்களுள்ளனவென்றும், பிராமணர்கள் பழையவழக்கத்தைமாற்றுவது சரியல்லவென்றும் பத்திரிகைகள் மூலம் எச்சரிக்கைசெய்துவருகிறார்கள்" என்று சொல்லிக்கொண்டு அதை ஆக்ஷேபிக்கும் யுக்திகள்மட்டும் திருப்திகரமாயில்லை. ஏனென்றால் நமக்குத்தோன்றும் அந்த யுக்திகளொன்றும் அவர்களுக்குத் தோன்றமாட்டாதென்றுசொல்ல இடமில்லையாகையாலும், அவர்கள் ருதுமதீவிவாஹகக்ஷியை விரோதிக்கவேண்டியவர்களில்லாமையாலும், பிரகிருதவியவஹாரத்தில் நடுவுநிலைமையுடையவர்களாயிருப்பதாலும்

ருதுமதீவிவாஹத்தில் அநுபவமில்லாத நமக்கு, அநுபவமுள்ள அவர்கள்சொல்லும் ஹிதவசனமானது வேதவாக்கியம்போலப் போற்றத்தக்கதென்றுதோன்றுகிறது. அன்றியும், உண்மையில் ருதுமதீவிவாஹம் தீமையில்லாததாயும், கந்யாவிவாஹம் தீமையுள்ளதாயுமிருக்குமானால், சாஸ்திரசம்மதமாயும் அநுபவசித்தமாயும் அநுகூலமாயுமுள்ள ருதுமதீவிவாஹத்தையே அவர்கள் நியதமாய்வைத்துக்கொண்டு, கந்யாவிவாஹத்தைச் சிறிதும் கைக்கொள்ளாதிருக்கவேண்டுமல்லவா? அப்படியில்லாமல் அவர்கள், ஸ்வாநுபவத்திற் கந்யாவிவாஹத்தையும் வைத்துக்கொண்டிருப்பதால், கந்யாவிவாஹம் ருதுமதீவிவாஹத்தைக்காட்டிலும் நல்லதென்று வீணாகப்பேசுவதாய்நினைக்கவும் இடமில்லையென்று தோன்றுகிறது. ஆகையால் அவர்கள் அப்படிச்சொல்லுவதற்குத் தக்ககாரணமின்னதென்பதை நாம் அறிந்துகொள்ளாமலே தள்ளிவிடுவது யுக்தமாகுமென்றுதோன்றவில்லை.

இனி, அதன்காரணத்தையும் சிறிதாராய்வோம். ருதுமதீவிவாஹமென்னும் இவ்வாசாரத்திருத்தத்தைக் கைக்கொள்ள இசைபவர்கள் பெரும்பாலும் செல்வவான்களாயும், இசையாதவர்கள் பெரும்பாலும் வறியவர்களாயுமே யிருக்கிறார்கள். இதைக்கொண்டு பார்ப்போமானால், செல்வவான்களான பிராமணர் ருதுமதீவிவாஹத்திலுள்ள பாதகங்களை அறியமுடியாதவர்களாயும், வறியவர்களாகிய பிராமணர்களே அவற்றையறிபவர்களாயுமிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. அதாவது செல்வமிருந்தால் அதன்பாதகம் தோன்றமாட்டாதென்றும், வறுமையிருந்தால் அதன்பாதகங்கள் தோன்றுமென்றும் அறியத்தக்கதென்பதாம். எப்படியென்றால், வறுமையென்பது பொதுவாகவே எல்லாவகுப்பாருக்குமே பொல்லாததென்று தெரிந்தபோதிலும் பொருள்தேடும் தொழில்களிற் பலவகையாகத் தடுக்கப்பட்டும், சுபாசுபங்களி லதிகச்செலவுசெய்யவேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்பட்டுமிருக்கும் பிராமணவகுப்பாருக்கு மிகவும் கொடுமையுடையதாயிருக்கிறது. இதரஜாதியார்களுக்கு வறுமைவந்தகாலத்தில் சிறுகுழந்தைமுதலவர்களாணும்பெண்ணும் எல்லாரும் எந்தவேலைகளையும் சொந்தவேலையாகவாவது கூலிவேலையாகவாவதுசெய்து பொருள்சம்பாதித்துக்கொள்ளவும்,சுபாசுபங்களி லதிகச்செலவுசெய்துதீரவேண்டிய நிர்ப்பந்தமில்லாமையால், கிடைத்தபொருளைக்கொண்டு மரியாதையாய்க் காலம்

கழிக்கவும் மார்க்கமிருக்கிறது. பிராமணர்களுக்கு அப்படியானவழக்கம் ஏற்படாதிருப்பதால் அது ஏற்படும்வரை ருதுமதீவிவாஹம் செய்யச் சாத்தியமில்லாததாயிருக்கிறது. ஏனென்றால் ஒவ்வொரு வறியவன் வீட்டிலும் பெரும்பாலு மாண்பிள்ளையின்சம்பாத்தியத்தாலே குழந்தைகளும், கிழவர்களும், பெண்பிள்ளைகளும் ஜீவிக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள். அந்தநிலையில் ருதுமதீவிவாஹத்துக்கு இணங்குவானானால் ஒவ்வொருபெண்மக்களையும் பதினெட்டுவயதுவரை வைத்துக்காப்பாற்றுவது மிகவும் கஷ்டசாத்தியமாயிருப்பதோடு தாய்தகப்பனிழந்தபெண்களுக்குத் தக்கஆதரவில்லாமற்போவதாலும், அச்சிறுபெண்கள் தாமேயொருமுயற்சிசெய்துஜீவிக்க மார்க்கமில்லாதிருப்பதாலும் அப்படிப்பட்ட பெண்பாலோர்கெதி நிர்க்கெதியாய் அவர்கள் மனம்போன போக்கே நடக்கவேண்டியவர்களாய்விடுவார்கள். செல்வவான்களுக்கு இப்படியானகஷ்டத்துக் கிடமில்லாமையால், ருதுமதீவிவாஹம் அநுகூலமாகவே தோன்றலாம். ஆனால், அவர்கள்செல்வம் சாஸ்வதமாய் நிலைநிற்கமாட்டாதாகையால் அவர்கள் சந்ததியாரும் வறுமையுற்றபோது இதேகெதி அடைவார்களென்பதிற் றடையில்லை. கந்யா விவாஹவிஷயத்திலோ இப்படிப்பட்ட தீங்குண்டாவதற்கு இடமில்லையென்று சொல்லலாம். எப்படியென்றால், கந்நிகைக்குச் சுமார் பத்துவயதுக்குள், கல்யாணம்நடப்பதால் அதுவரை எப்படிப்பட்ட வறிபகுடும்பத்தாரும் சோபனத்திரவியம்வாங்கும் பிரதிப்ரயோஜனத்தைப்பொறுத்தாவது அவளைச் சம்ரக்ஷணைசெய்ய இடமிருக்கிறது. விவாஹமாகவும் பிறந்தவீட்டார் சம்ரக்ஷணைசெய்யும் சக்தியுள்ளவர்களாயிருந்தால், பின்னுஞ் சிலகாலம் பிறந்தவீட்டிலிருக்கலாம். சக்தியற்றவர்களாயிருப்பார்களாயின், பணச்செலவுசெய்து கல்யாணஞ்செய்தபுருஷன் பாதுகாத்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாகச் சன்னத்தனாயிருக்கிறான். ஆதலால் அவள் நிர்க்கெதியாக இடமில்லாமவிருக்கிறது. இதனால் என்ன ஏற்படுகிறதென்றால், பிராமணவகுப்பில் வறுமைவந்தகாலத்தில் 10 வயதுமுதல் ஆணும்பெண்ணும் எந்தவேலையுஞ்செய்து ஜீவித்துக்கொள்ளலாம் என்ற வழக்கம் ஏற்படும்வரை பிராமணவகுப்புக்கு ருதுமதீவிவாஹம் சாதகமாகமாட்டாதென்பதாம்.

திரு. நாராயணையங்கார்,
பத்திராதிபர்

---

# ரஸாயன நூல்.

# CHEMISTRY.

செந்தமிழ் (தொகுதி-கச பகுதி௨-ல்) எச-ஆம்பக்கத் தொடர்ச்சி.

## அத்யாயம்—21.

## லோஹங்கள்.

## Metals.

ரஸாய்னமூலங்கள், லோஹங்கள் எனவும் அலோஹங்(Non-Metals)கள் எனவும் இருவகையாய்ப் பிரிக்கப்படும். அலோஹங்களைப் பற்றி முன் ப்ரகரணங்களில் விவரிக்கப்பட்டிருக்கின்றது.

### லோஹ-அலோகங்களுக்குள்ள வித்யாஸங்கள்.

பௌதிக(physical) வித்யாஸங்கள்:—

(1) அலோஹங்களைப்பார்க்கிலும் லோஹங்களில் ஒருவித ப்ரகாசமும்,

(2) உறுதியும்,

(3) வளையுந்தன்மையும் இருக்கின்றன.

**லோஹங்களின்தன்மைகள்:**—எல்லாலோஹங்களுக்கும், ப்ரகாசம், வளைவு, தகடாகுந்தன்மை, உறுதிமுதலான குணங்கள் இருப்பதில்லை. லோஹங்களைப்பொடியாக்கிவிட்டால் அவைகளின் பளபளப்பு, குறைந்துவிடும். தாம்ராக்ஸிஜத்திலிருந்து பிரிக்கப்படும் தாம்ரம் கபில வர்ணமாயிருக்கும். சில லோஹங்கள் சிலசிலநிலைமைகளில் நொறுங்குந்தன்மையடைகின்றன. சிலலோஹங்கள் உஷ்ணவாஹினிகளாகவும் மின்சாரவாஹினிகளாகவும் இருக்கின்றன. சிலலோஹங்கள்கலந்து கலப்புக்(alloys)கள் ஆகின்றன. நாகமும் தாம்ரமும் கலந்து பித்தளையுண்டாகின்றது. பாதரஸத்துடன்கலந்துண்டாகும் கலப்புக்களுக்கு ரஸக்கலப்புக்(amalgam)கள் என்றுபெயர்.

### ரஸாயனவித்யாஸங்கள்.

அலோஹங்கள் அமிலாக்ஸிஜங்களாக ஆதாரங்களாகவும், லோஹங்கள் தாரகாக்ஸிஜங்களாக ஆதாரங்களாகவும் இருக்கின்றன. ஆனால் தகரம் முதலான சிலலோஹங்கள் இருவகைஆக்ஸிஜங்களும் ஆகின்றன.

### லோஹங்களைப்பற்றிய சிலவிவரங்கள்.

(1) லோஹங்கள் அமிலங்களுடன்கலக்கையில், அவைகளிலுள்ள ஹைத்ரத்தைப்பிரித்துவிட்டு, அதன் ஸ்தானத்தில் தாம் சேர்ந்து அந்தந்த லோஹஉப்புக்கள் ஆகின்றன.

உதாரணம்.

தகரம் +2க்ளோரோஹைத்ரம் = 2 ஹைத்ரம் தகரக்ளோரம்

$$Sn+2\,HCl=H_2+Sn\,Cl_2.$$

(2) உப்புக்களைத் தண்ணீரிற்கரைத்து மின்சாரப்ரயோகஞ்செய்தால், அவ்வுப்புப் பிரிந்து அதிலுள்ள அலோஹசத்து நேர்முனைப்பக்கத்திலும், லோஹசத்து எதிர்முனைப்பக்கத்திலும் வந்தடையும்.

குறிப்பு:—நேர்முனை = Positive pole.

எதிர்முனை = Negative pole.

### பரிவர்த்தனம் (Displacement).

உப்பிலுள்ள லோஹத்தை இன்னொருலோஹம்பிரித்து, அந்த ஸ்தானத்தில் தான்கலந்து புதியலோஹ உப்பாவதுமுண்டு. இத்தன்மைக்குத்தக்கவாறு லோஹங்களை வகுப்பதுமுண்டு. உதாரணம்:—இரும்புஉப்பு தாம்ரஉப்புக்களிலுள்ள, இரும்புதாம்ரங்களை மக்னீஷியம் பிரித்து, மக்னீஷியஉப்புக்கள் உண்டாகும். அதேமாதிரி இரும்பு தாம்ரத்தைப் பிரித்துவிடும். இக்குணத்திற் சிறந்தவை ஸோடியமும், பொடாஸியமும்.

---

## அத்யாயம்—22.

### ஸோடியம்.

### Sodium.

### [Na]

ஸோடியம் என்பது உறுதிக்குறைவும் மிருதுவுமுள்ள ஒரு லோஹமூலம். அது தண்ணீரில் மிதக்கும். அதைக் கத்தியால் வெட்டலாம். அது பாதரஸத்திற்கரைந்து ஸோடியரஸக்கலப்பு ஆகின்றது.

**எச்சரிக்கை.** ஸோடியம் பொடாஸியம் என்னும் லோஹங்களைக் கையாடல் ஆகாது. அவை தண்ணீரிற்பட்டால் ரஸாயனப்பிரிவுண்டாகுமாகையால் மண்ணெண்ணெயில்தான் காப்பாற்றிவைக்கவேண்டும். ஸோடியம் தனிப்பொருளாய் அகப்படுவதில்லை.

ஸோடியகல்பங்கள் பலவாறாக ப்ரக்ருதியில் அகப்படுகின்றன. அவைகள் மிக உபயோகமானவை. நாம் உண்ணும் கறியுப்பு ஸோடியமும் க்ளோரமும் கலந்த ஒரு கல்பம்.

## ஸோடா.
## Soda.

ஸோடா அல்லது ஸோடியாக்ஸிஜம், ஒரு பிறவிச்சரக்கு. இதிலுள்ள ஆக்ஸிஜனை உஷ்ணத்தாற்பிரித்தால், சோடியம் என்னும் லோஹமூலம் மிஞ்சிவிடும். ஸோடியத்தை ஒருகரண்டியில்வைத்துக் காய்ச்சினால், முதலில் அது உருகிப் பிறகு தீப்பற்றிக்கொண்டு மஞ்சள்நிறமாய் எரியும். அப்பொழுது பக்கத்திலுள்ள ஆக்ஸிஜனுடன்கலந்து ஸோடியாக்ஸிஜம் வெள்ளைப்புகையாய் வெளிப்படும்.

## ஸோடியம் ஹைத்ராக்ஸிஜம்.

ஸோடியம் தண்ணீரிற்பட்டவுடன் தண்ணீரிலுள்ள ஹைத்ரமும் ஆக்ஸிஜனும்பிரிந்து, ஸோடியம் ஹைத்ராக்ஸிஜமும், ஹைத்ரமும் உண்டாகும். உதாரணம்:—

$$\left.\begin{array}{l}2\ \text{ஸோடியம்}\\+2\ \text{ஜலம்}\end{array}\right\}=\left\{\begin{array}{l}2\ \text{ஸோடியம் ஹைத்ராக்ஸிஜம்}\\+2\ \text{ஹைத்ரம்.}\end{array}\right.$$

$$2\,Na+2\,H_2O=2\,Na\,OH+H_2$$

இது தண்ணீரிற்பட்டவுடன் சிலசமயங்களில் வெடிப்பதுமுண்டு. ஆகையாற் சிதறிப்போகாமல் ஜாக்ரதையாய்க் கையாடல்வேண்டும். இது ஒரு எரிகாரம். சலவைச்சோடாவிலிருந்தும் இதை எடுப்பதுண்டு.

**உதாரணம்:—**

$$\left.\begin{array}{l}\text{சலவைச்சோடா}\\+\text{சுண்ணும்புநீறு}\end{array}\right\}=\left\{\begin{array}{l}2\ \text{ஸோடியம் ஹைத்ராக்ஸிஜம்}\\+\text{சுண்ணும்பு.}\end{array}\right.$$

$$Na_2\,CO_3+Ca(OH)_2=2\,Na\,OH+Ca\,CO_3.$$

குறிப்பு:—சுண்ணம்பு = Quicklime.
சுண்ணம்புநீறு = Slaked lime.
ஸோடியம் ஹைத்ராக்ஸிஜம் = ஸோடியம் எரிகாரம்.

## சலவைச்சோடா.
## Sodium Carbonate.
## [$Na_2\ CO_3$]

மறுபெயர்-பூநீறு என்று சொல்லப்படும். இது ஒரு இளங்காரம். இது ஸ்படிகரூபமாயிருக்கும். திறந்துவைத்தாற் காற்றுக்குடித்துவிடும். ஸோடியம் எரிகாரத்திற் கரித்வயாக்ஸிஜத்தைச்செலுத்தினாற் சலவைச் சோடாவும் ஜலமும் உண்டாகும். இது பச்சைவிட்டமலைச் சிவப்பாக்கும். இது சுண்ணம்புநீறுடன்கலந்து சீமைச்சுண்ணம்பு உண்டாக்கும்.

முறை:—ஸோடியம் எரிகாரம் + கரித்வயாக்ஸிஜம் } = { சலவைச்சோடா + ஜலம்

$$2\ Na\ OH + CO_2 = Na_2\ CO_3 + H_2O.$$

சலவைச்சோடாவும் க்ளோராமிலமுங் கலந்தாற் கறியுப்பும், கரித்வயாக்ஸிஜமும், ஜலமும் உண்டாகும்.

முறை:—சலவைச்சோடா + 2 க்ளோராமிலம் } = { 2 கறியுப்பு + கரித்வயாக்ஸிஜம் + ஜலம்

$$Na_2\ CO_3 + 2\ Hcl = 2\ Na\ cl + CO_2 + H_2O.$$

## ரொட்டிச்சோடா.
## Baking Soda.
## [$Na\ H\ CO_3$]

சலவைச்சோடாவைத் தண்ணீரிற்கரைத்து அதிற் கரித்வயாக்ஸிஜத்தைச் செலுத்தினால், ரொட்டிச்சோடா உண்டாகும்.

முறை :— சலவைச்சோடா + ஜலம் + கரித்வயாக்ஸிஜம் } = 2 ரொட்டிச்சோடா.

$$Na_2\ CO_3 + H_2O + CO_2 = 2\ Na\ H\ CO_3.$$

அல்லது $2\ Na\ O\ H + 2\ CO_2 = 2\ Na\ H\ CO_3.$

## கறியுப்பு.

## Common Salt.

[Na cl]

பரிபாஷை—க்ளோரோஸோடியம்.

கறியுப்பு, சாதாரணமாய்க் கடல்நீரிலும், சில மண்களிலும் பாறைகளிலும் கலந்து அகப்படும். இது ஸோடியமும் க்ளோரமும் கலந்த ஒரு கல்பப்பொருள்.

செய்முறை:—க்ளோரோஹைத்ரவாயுவுடன் ஸோடியத்தைக்கலப்பதால், ஹைத்ரம் பிரிந்து க்ளோரோஸோடியம் என்னும் கறியுப்பு உண்டாகும்.

ஸோடியம் + க்ளோரோஹைத்ரம் } = { ஹைத்ரம் + கறியுப்பு.

$$Na+Hcl=Na\,cl+H.$$

குறிப்பு. க்ளோரோஹைத்ரம்=க்ளோராமிலம்=Hydrochloric Acid.

## ஸோடியம் க்ளோரஜம்.

## Sodium Chlorate.

$[Na\,cl\,O_3]$

ஸோடியம்ஹைத்ராக்ஷிஜத்துடன் க்ளோரத்தைக்கலப்பதால், க்ளோரோஸோடியமும், ஸோடியம்க்ளோரஜமும் உண்டாகும்.

முறை:— 6 க்ளோரம் +6 ஸோடியம்ஹைத்ராக்ஷிஜம் } = { ஸோடியம்க்ளோரஜம் +5 க்ளோரோஸோடியம் +3 ஜலம்.

$$3\,cl_2+6\,Na\,OH=Na\,cl\,O_3+5\,Na\,cl+3\,H_2\,O.$$

## சில்லியுப்பு.

## Chili Saltpetre.

பரிபாஷை— { ஸோடியம்நைத்ரஜம். Sodium Nitrate.

இது அநேகமாய் வெடியுப்பை ஒத்திருக்கும். சில்லியென்னும் தேசத்தில் விசேஷமாய் அகப்படுவதால் இதற்கு இப்பெயர் அமைந்தது. ஸோடியம்ஹைத்ராக்ஸிஜத்தை நைத்ராமிலத்துடன்கலந்தால் இவ்வுப்பு உண்டாகும்.

முறை:—ஸோடியம்ஹைத்ராக்ஸிஜம் + நைத்ராமிலம் = சில்லியுப்பு + ஜலம்.

$$Na\,OH + H\,NO_3 = Na\,NO_3 + H_2O.$$

## அமிலஉப்பு, சுத்தஉப்பு.
## Acid, Salts and Normal Salts.

இப்ரகரணத்தில் இவ்விருவகை உப்புக்களுக்குமுள்ள வித்யாஸத்தை யறிந்துகொள்ளவேண்டும். சுத்தஉப்பில் ஹைத்ரமேகிடையாது. அது நிஷ்காரமாயிருக்கும். அமிலஉப்பில் கொஞ்சம் ஹைத்ரமிருக்கும். உதாரணம்:—

ஸோடியம்கந்தஜம் ($Na_2\,SO_4$) சுத்தஉப்பு.

ஸோடியம்ஹைத்ரோகந்தஜம் ($Na\,H\,SO_4$) அமிலஉப்பு.

முறை:—கறியுப்பு + கந்தாமிலம் = ஸோடியம்ஹைத்ரோகந்தஜம் + க்ளோராமிலம்.

$$Na\,cl + H_2SO_4 = Na\,H\,SO_4 + H\,cl.$$

கறியுப்பு + ஸோடியம்ஹைத்ரோகந்தஜம் = ஸோடியம்கந்தஜம் + க்ளோராமிலம்.

$$Na\,cl + Na\,H\,SO_4 = Na_2\,SO_4 + H\,cl.$$

**குறிப்பு.** $Na_2\,SO_4$ = க்ளாவர் உப்பு. (Glanbor's salt)

---

## அத்யாயம்—23.
## பொடாஸியம்.
## Potassium.
## [K]

பொடாஸியமும் ஸோடியமும் ஓரினத்தைச்சேர்ந்தவை. அநேகமாய் ஸோடியத்தின் தன்மைகள் பொடாஸியத்துக்கு முண்டு.

## பொடாஸியம்எரிகாரம்.
## Potassium Hydrogen.
## [K O H]

பொடாஸியம் தண்ணீரிற்பட்டவுடன் ரஸாயனமாறுபாடுகள் ஏற்படுகையில், ஸோடியத்தைக்காட்டிலும் அதிக உஷ்ணமுண்டாகும். அதனால் தண்ணீரிலிருந்துபிரிந்த ஹைத்ரம் பற்றி எரியும். தண்ணீரிலுள்ள ஆக்ஸிஜனும் ஒருபங்கு ஹைத்ரமும் பொடாஸியத்துடன்கலந்து பொடாஸியம் ஹைத்ராக்ஸிஜம் என்னும் எரிகாரமுண்டாகும்.

| | | |
|---|---|---|
| பொடாஸியம்<br>+ஜலம் | = | பொடாஸியம்ஹைத்ராக்ஸிஜம்<br>+ஹைத்ரம். |

$K + H_2O = KHO + H.$

## பொடாஸியம்க்ளோரஜம்.
## Potassium Cholorate.
## [K cl $O_3$]

முற்கூறிய பொடாஸியம்எரிகாரத்திற் க்ளோரத்தைக்கலந்தால், பொடாஸியம்க்ளோரஜமும் பொடாஸியக்ளோரமும் ஜலமும் உண்டாகும்.

முறை:—

| | | |
|---|---|---|
| 6 பொடாஸியம்ஹைத்ராக்ஸிஜம்<br>6 க்ளோரம் | = | பொடாஸியம்க்ளோரஜம்<br>5 பொடாஸியம்க்ளோரம்<br>3 ஜலம். |

$3\ Cl_2 + 6\ KOH = K\ cl\ O_3 + 5\ Kcl + 3\ H_2O.$

## பொடாஸியம்உப்புக்கள்.

| வழக்குப்பெயர். | பரிபாஷை. | குறி. |
|---|---|---|
| வெடியுப்பு. | பொடாஸியம்நைத்ரஜம் | $K\ NO_3$. |
| | பொடாஸியம்க்ளோரஜம் | $K\ clO_3$. |
| மரஉப்பு | பொடாஸியம்கரிஜம் | $K_2\ CO_3$. |

## வெடியுப்பு.
## Nitre அல்லது Saltpetre.

இது விசேஷமாய், ஸோடியம்நைத்ரஜமும் க்ளோரோபொடாஸியமும் கலந் துண்டாகும்.

முறை:—ஸோடியம்நைத்ரஜம் + க்ளோரோபொடாஸியம் } = { வெடியுப்பு + கறியுப்பு.

$NaNO_3 + KCl = KNO_3 + NaCl.$

உபயோகம். இது முக்யமாய் வெடிமருந்துசெய்வதற்கு உபயோகமாகின்றது.

மர உப்பு.

Potashes.

Potassium Carbonate.

பொடாஸியம் ஹைத்ராக்ஸிஜமும் கரித்வயாக்ஸிஜமும் கலந்து மர உப்பும் ஜலமும் உண்டாகின்றன.

முறை:—2 பொடாஸியம்ஹைத்ராக்ஸிஜம் + கரித்வயாக்ஸிஜம் } = { மரஉப்பு + ஜலம்.

$2 KOH + CO_2 = K_2CO_3 + H_2O.$

(தொடரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர் B.A. B.L.

---

௨

## அன்பைப்பற்றிய பாடல்கள்.

[இப்பாடல்கள் கனம்பொருந்திய திவான் இராமையங்கார் அவர்கள் C. S. I. விரும்பியபடி, மனோன்மணீயம், திருஞானசம்பந்தர்காலம் முதலிய நூல்களின் ஆசிரியரான காலஞ்சென்ற திருவனந்தபுரம் ப்ரொபஸர் சுந்தரம்பிள்ளை M. A. அவர்களால், ஸெயின்ட்பால் என்பவர் அன்பைப்பற்றி ஆங்கிலத்தில் எழுதியிருந்தபாடல்களின்கருத்தைத் தழுவி இயற்றப்பெற்றனவாம்; 1891-ஆம் வருஷத்து மார்ச்சுமாதத்திய ஜநாநந்திநிப்பத்திரிகையில் வெளிவந்துள்ள இப்பாடல்களை நம் செந்தமிழ்நேயர்களும் படித்து மகிழுமாறு ஈண்டு வெளியிடுகின்றேன்.]

### கட்டளைக்கலித்துறை.

பிறங்கும் பிறர்குறை பேணாது நற்குணம் பேணலுறும்
அறந்திகழ் நெஞ்சின ரன்றே லவர்விண் ணமிர்தினையும்
மறந்திடும் வண்ணம் வடித்துப் படிக்கின்ற வார்த்தையெல்லாம்
வெறுங்கல கல்லென்னும் வெங்கல வோசையின் வேறலவே. (1)

### எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வருபொரு ளுரைக்கும் வல்லபம் பெறிலென்
மண்ணிடை விண்ணிடை மறைந்த
பெருரக சியங்கள் யாவையு முணரும்
பெருமையும் ஞானமும் பெறிலென்
பருவத மெடுத்துப் பந்தென வாடும்
பத்தியுஞ் சித்தியும் பெறிலென்
பரவனு கூல திருட்டியென் றுரைக்கும்
பண்புறு மன்பிலை யெனிலே. (2)

இல்லவர் யாரும் புசித்துநற் சுகமே
யெய்திடப் பொருளெலா மீந்தென்
நல்லமெய் தனையுஞ் சிபியெனத் தன்கோள்
நாட்டிட நல்கியு மென்னை
அல்லவர் தமையும் நல்லவ ரெனவே
யனுதின மதித்துகந் திடுமோர்
சொல்லிடும் பிரிய வன்புமற் றிலையேற்
சுகமிலை யென்பது துணிபே. (3)

பிறர்க்கெலா மின்பம் பெருக்குவ தன்பே
பிறர்செயுந் தீங்கனைத் தினையும்
பொறுத்துமேன் மேலும் மகிழ்வது மன்பே
போற்றிய பிறர்வயி னுற்ற
சிறப்பது கண்டங் கழுக்காறு விடுத்துச்
சித்தமுட் களிப்பது மன்பே
அறச்சிறி தேனு மன்புதன் பெருமை
யறிந்திறு மாப்படை யாதே. (4)

அன்னியர் குணமா மன்பெனு மணங்கி
னழகினை யின்னமுங் கேண்மோ
தன்னியல் நடக்கை தக்கவா றன்றித்
தவறுறாத் தன்மைய டனது

மன்னிய வுரிமைப் பொருடனக் காக
மறந்துமே வழங்கிட வறியாள்
என்னன செயினு மெளிவரு கோப
மில்லெனுங் கொன்றுமே யெண்ணாள். (5)

### கலிவிருத்தம்.

கொடுமை யென்றெவர் கூறினுங் கேட்டுளம்
நடுந டுங்குவள் நாணமுற் றஞ்சுவள்
கெடல ரும்புகழ் மெய்ம்மை கிளத்தல்கேட்
டுடல மெங்கும் புளகித் துவப்பளே. (6)

வந்த வெல்லாம் பொறுத்து மகிழ்வளே
நந்தல் செய்யினும் நம்புதல் விட் டிடாள்
எந்த வேளையு மேல்வரு மின்பமே
சிந்தை செய்குவள் தீங்கு கவனியாள். (7)

### அறுசீரடியாசிரியவிருத்தம்.

இப்படி யாவ ரானு மெய்துதற் கரிதாய் நின்ற
செப்பிய பரானு கூல தெரிசன சித்த மொன்றே
மெய்ப்பட நிற்கும் மேலால் விளைவதோ ருணர்வு மோர்கால்
பொய்ப்படும் புலமை போகும் போய்விடு மறிவுந் தானே. (8)

பாலியத் தன்மை யாலே பற்றிய கழற்சி பந்து
போலவு மாடி யூடே பொருந்திய பார்வை போலும்
ஏலவு மென்னை யானே நேர்பட வறிதற் கேற்ற
காலையில் துச்ச மாகிக் கழியுமே கண்ட வெல்லாம். (9–12)

உற்றவிவ் வினைத்து மேகி லொழிவிலா தேதென் றோதில்
முற்றிலும் நம்பு பத்தி கைவிடான் முதலோ னென்று
பற்றிய வுறுதி முன்னம் பகர்ந்திடு மன்பு மாமே
மற்றவை தம்மின் மேலாய் மன்னுவ தன்பே யம்ம! (13)

T. V. சதாசிவப்பண்டாரத்தார்,
திருப்புறம்பயம்.

# மேற்கோள் விளக்கம்.

ஸ்ரீமத். S. இராதாகிருஷ்ணையர் B.A., F.M.U., அவர்கள் "செந்தமிழ்"த் தொகுதி 14 பகுதி 1-ல் செவ்வனம் ஆராய்ந்தெழுதிய மேற்கோள்விளக்கத்தைக் கண்ணுற்றேன். பொருளதிகாரப்பயிற்சிபெறுவோர்க்கு முற்கூறியவிளக்கம் பெரிதும் உபயோகமாகுமென்பது இனிதுபுலனும். இன்னும், அச்சில்வராத அகநானூறு, பரிபாடல், கொங்குவேண்மாக்கதை என் றின்னோரன்ன அரியநூல்களின்பிரயோகங்கள்பல அவ்வுரையில் மலிந்துகிடக்கின்றன.

அவையும் ஒவ்வொன்றாய் ஆராய்ந்து வெளியிடப்படின், தமிழாராய்ச்சியுடையார்பலர்க்கும் பயனளிக்குமென்பது திண்ணம்.

இனி, ஸ்ரீ ஐயரவர்கள்மேற்கோள்விளக்கத்திற்பெறாத "கலித்தொகை"ப்பாட்டுக்களின்மேற்கோள்கள் 34 வரையில் எனது சிற்றாராய்ச்சியிற் கிடைத்தவற்றைப் "பொருளதிகாரவுரை"யினின்றும் ஈண்டுக் கீழே தருகின்றேன்.

## தொல்காப்பியப் பொருளதிகாரவுரையில் மேற்கோளாக எடுத்தாளப்பட்ட கலித்தொகைப்பாட்டுக்களின் முதற்குறிப்பு.

| வரிசைகிர். | பொருளதிகார அச்சுப்புத்தகத்தின் பக்கம். | மேற்கோள். | கலித்தொகைப் பாட்டின் எண். | அடிகள். |
|---|---|---|---|---|
| 1 | 41 | தோழிநாங்......மகன் | 115 | 1—4 |
| 2 | 200 | பொய்தீருல......செய்தாள் | 141 | 11—14 |
| 3 | 266 | தேரேமுற்றன்று......பெரிதே | 74 | 15 |
| 4 | 302 | கடுமாகட......கவினே | 50 | 19—24 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | 305 | தன்னெவ்வம்......ணுணி | 44 | 8—10 |
| 6 | 317 | செவ்வியதீவிய......மன்றவினி | 19 | 1—6 |
| 7 | 357 | அனவகையால்......கொண்டு | 92 | 59—68 |
| 8 | 358 | அதிர்வில்......செல | 81 | 29—32 |
| 9 | 393 | மானோக்கி......வினி | 87 | 11—13 |
| 10 | 396 | எனநீ, தெருமரல்......தூதே | 26 | 21—25 |
| 11 | 399 | தந்தையிறைத்......எல்லாவிது | 84 | 30—32 |
| 12 | 411 | கடைஇய......யார்க்கு | 77 | 21—24 |
| 13 | 421 | வேட்டோர்......நிறுத்து | 66 | 23—25 |
| 14 | 433 | பொன்செய்வாம் | 60 | 23 |
| 15 | 442 | பூணாகமுறத்......போதந்தான் | 39 | 4 |
| 16 | 450 | மெய்யறியா......கிடந்தேன் | 37 | 19 |
| 17 | 456 | ஒன்று, இரப்பான்......பன்மாணும் | 47 | 1—8 |
| 18 | 465 | ஆங்காக......விடற்கு | 64 | 25—29 |
| 19 | ,, | மொழிவது... யாம் | ,, | 8—10 |
| 20 | ,, | எல்லா, நற்றோ..... யினி | ,, | 19—22 |
| 21 | ,, | நல்லாய், இகுளை......பல | ,, | 22—24 |
| 22 | ,, | உழுதாய்......மற்றினி | ,, | 11—19 |
| 23 | 468 | வையினர்......நினைத்தல் | 134 | 19 |
| 24 | 478 | நடுங்குதல்......தனரே | 13 | 27 |
| 25 | 479 | துளியிடைமின்......துஞ்சேன் | 139 | 5—7 |
| 26 | 484 | அச்சாறுக......ணாகுவல் | 75 | 20—21 |
| 27 | 485 | செய்தவறில்......வாய் | 87 | 3 |
| 28 | 506 | காமருநோக்கினை......றின்னாதே | 80 | 14—15 |
| 29 | ,, | பால்கொள......றொவ்வாதி | 86 | 17—18 |
| 30 | 510 | பட்டழியறியாது......நின்றாய் | 69 | 12—13 |
| 31 | 531, 768 | எரியுருவுறழ......மலர | 33 | 10 |
| 32 | 537 | வேனிற்புன......யார் | 84 | 38 |
| 33 | 758 | கதிர்பகா......தீ | 142 | 37—41 |
| 34 | 766 | ஆணமில்......யாடி | | கடவுள் வாழ்த்து 16 |

மணக்கால் அய்யம்பேட்டை
"S. T. Vilas"
13—2—16.

S. முத்துரத்நமுதலியார்.

ஸ்ரீ:

# ராமாயணகுசேலன்—த்ரிஜடர்.

குசேலன்:—இவர் குற்சிதமான அல்லது சிதைந்தவஸ்திரத்தைத் தரித்துக்கொண்டிருந்தமையாலேயே, குசேலன் என்னும் பெயர் பெற்ருர். ஸ்ரீ மஹாபாகவதத்தில் இக் குசேலன் க்ருஷ்ணபக்தனுகவிருந்து முக்திபெற்றமையும், அவருடைய மற்றைய வரலாறுகளும் கூறப்பெற்றுள்ளன. ஸ்ரீராமபிரான்காலத்திலும் பரமபாகவதனுன த்ரிஜடர் என்ற ராமாயணகுசேலர் ஒருவர் இருந்ததாக, ஸ்ரீமத் வான்மீகராமாயணத்திலிருந்து அறிகிருேம். குசேலரதுவஸ்த்ரம் இருந்தாற்போன்றே த்ரிஜடர்தரித்திருந்தவஸ்த்ரமும் ஸஹஸ்ரம்த்வாரங்களையுடையதாயிருந்தது. குசேலர்மனைவிபோன்றே, நமது த்ரிஜடர்மனைவியும் பரிசுத்தமான ஒழுக்கமும், பாதிவ்ருத்யமும், பதிபக்தியும், சுசிருசியுமுள்ள தெய்வப்பெண்போன்றிருந்தாள். இருபத்தேழு நக்ஷத்திரங்களுக்கும் இருபத்தேழுபுத்ரர்களையுடையராயிருந்த குசேலருக்குமாருக, ராமாயணகுசேலராகிய த்ரிஜடர் எண்ணிறந்தபுத்ரபாக்யத்தையுடையவராயிருந்ததனுல், ஸ்ரீ பாகவதகுசேலரைக்காட்டிலும் இவர் மிக்கதரித்ரரென்பது நன்குவிளங்கக்கூடியதாயிருக்கிறது.

பாகவதகுசேலர் நாட்டிலிருந்து பகவந்நாமசங்கீர்த்தனத்துடன் வீதிகள்தோறுஞ்சென்று உஞ்சவ்ருத்திசெய்து, அதனைக்கொண்டு ஜீவனஞ்செய்துவந்தவர். ராமாயணகுசேலராகிய த்ரிஜடரோ, கோசலதேசத்துக்கருகிலிருந்த வனப்பிராந்தியங்களில்வஸித்து, அங்குக் காய் கிழங்குகளையும் பழம், சருகுகளையும், வயல்களில் உதிர்ந்தநெற்களையும் கொண்டுவந்து தம் எண்ணிறந்தசிசுக்கள்நிறைந்தகுடும்பத்தை ஸம்ரக்ஷணஞ்செய்துவந்தவர். இவர்கையிலிருந்த மரங்களிலிருக்கும் பழங்களைக்ரஹிக்கஏற்பட்ட துறட்டுக்கோல், கிழங்குகளைத்தோண்டுவதற்கேற்பட்ட மண்வெட்டி, அவைகளை நிறைப்பதற்கேற்ற கூடை இவைகளே இவருடையஆஸ்தியாம். இவர், காட்டில் தமக்கு யதேச்சையாய் அகப்பட்டவற்றைக்கொண்டு காலந்தள்ளிவந்தவர். ஆகாராதிகள் சிலகாலம் அகப்படாமல், குழந்தைகள்கூட இரண்டுமூன்றுநாட்களுக்கொருதரம் ஸமயத்திற்கேற்றவாறு ஆகாரம்பண்ணுவதுண்டு. இதிலிருந்து ஸ்ரீ க்ருஷ்ணன்காலத்துக் குசேலருக்கும் ஸ்ரீராமன்காலத்துக் குசேலருக்குமுள்ள தாரதம்யம் விளங்குவதாகும்.

கைகேயியின்சொற்கேட்டுப் பிதுர்வாக்யபரிபாலனம்பண்ணும் பொருட்டு ஸ்ரீராமன் நாடுதுறந்து, வனவாஸம்செய்யப்புறப்படுகையில் தனக்கு ஸொந்தமான ஆஸ்திகளையெல்லாம் எடுத்து ப்ராம்மணருக்கு ஏராளமாகத் தானம்செய்தார். இராமபிரான் வஸிஷ்டபுத்ரரும், தனது ஆப்தநண்பருமாகிய ஸுயக்ஞர் என்ற மகாத்மாவுக்குத் தனது யானையான ஸத்ருஞ்சயத்தையும், தனது தந்தக்கட்டில்முதலியவற்றையும், இன்னும் பிறவற்றையும் அவற்றிற்குரிய உபகரணங்களுடன் கொடுத்ததுமன்றி, ஸ்ரீ ஸீதாதேவியும் தனது ஆபரணமுதலிய யாவற்றையும் அவரது பத்னிக்குக்கொடுக்கும்படி அவரிடத்திலேயே கொடுத்தாள். ஸ்ரீராமன் தனது பொக்கிஷமுதலிய யாவற்றையும் ஸத்ப்ராஹ்மணர் முதலியோர்க்கு ஏராளமாய் வாரிவாரி எடுத்துத் தானம்செய்தார்.

அச்சமயத்தில், காட்டிலிருந்து இங்குப்போகிறோம் என்று குறிக்கொள்ளாமல், ஸஞ்சாரஞ்செய்துகொண்டுவரும் அபாரஸம்ஸாரியான ப்ரம்மதேஜஸ்பொருந்திய த்ரிஜடர், தம் குழந்தைகளுடனும், பத்நியுடனும் அயோத்யாநகரம் புகுந்தார். வளர்ந்து உயர்ந்த யாக்கையையும்,விசாலமான வக்ஷஸ்தலத்தையும்,விசாலமானநேத்ரத்தையுமுடைய த்ரிஜடரைப்பார்த்து, அவரதுபத்நி, "ஏ! பிராணநாதா! அயோத்யாநகரத்து ஸ்ரீராமன் மகாகுணவான் என்றும் கீர்த்திமானென்றும் ப்ராஹ்மணவத்ஸலன் என்றும் கேள்விப்படுகிறேன்! அவரைத் தரிசனம்செய்தல் நேரிது" என்று என்மனதிற்படுகின்றது என்றாள். இதுகேட்ட ஸாத்வியும், பக்திமானுமான ராமாயணகுசேலராகிய த்ரிஜடர், தனது கந்தைவஸ்திரத்தை ஸரிப்படுத்தி இறுக்கி இடுப்பிற்கட்டிக் கொண்டார். ராஜஸபையிற்போகவேண்டிய உடையில்லாமற்போனாலும், அதற்குவேண்டிய அழகு தனக்கு இல்லாமற்போயினும், ஒருவாறு ஸரிப்படுத்திக்கொண்டு, ஸ்ரீராமனிருக்குமிடம்நோக்கி விரைந்து செல்வதானார். பாகவதகுசேலர் துவாரகையைநோக்கி, முன் ஸ்நேகத்தையொட்டிப்போனதுபோ லில்லாது, ஸ்ரீராமர்காலத்துக்குசேலராகிய த்ரிஜடர், தனித்துப்போகாமல், தான் முன்னும், தன்பாரியை பின்னும், குழந்தைகள் ஒவ்வொன்றாய்ப் பின்னும் தமது ஆஸ்தியாகிய துறட்டுக்கோல்முதலியவற்றுடன், ஸ்ரீராமஸந்நிதிகுறுகினார். போகிறவழியிலுள்ள ஜனங்களின்தொகையோ அபரிமிதமாயினும், ஏன் ஆசாரவாசலில் நுழைகின்றனை? நீயாவன்? உனக்கென்னவேலை? என்றுசொல்லும்

சேவகர் துவாரபாலகர்களின் கடுமொழிகளின்றியே, இம்மஹான் உட்புகக் கூட்டம்முழுவதும் அப்படியப்படியே கலேந்து இடங்கொடுக்க, இவர் வெகுதாராளமாய் உள்ளேசென்ருர். ஸ்ரீ ஸீதாராமனைக் கண்ணினுற் கண்டார். தன் இருகைகளையும் தன்கைத்தண்டத்துடனும் தூக்கிய வண்ணமாய் அஞ்சலிசெய்துகொண்டு தான் அதிகதரித்ரன் அதிகஸம்ஸாரி என்று சொன்னர். குறிப்பினுல் யாசகர்களின்மனதையறிந்து கொடுக்கும் கொடைவள்ளலாகிய ஸ்ரீ பகவான், கள்ளங்கவடில்லாத பிரம்மதேஜஸ்பொருந்திய பிராம்மணனின் எண்ணம், தன்னிடமுள்ள பணம் செலவழிந்துவிடப்போகிறதே என்ற நோக்கத்துடனிருக்குமென்பதாக நினைத்தார். எனினும் அந்த ப்ரம்மதேஜஸ்வியின் தேஜஸ்ஸை அங்குள்ளவருக்குக்காட்டவிரும்பி ஏ! பிராம்மணுேத்தமரே! திரவியமெல்லாம் செலவழிந்துவிட்டன! அநேகம்கோக்களைத் தானம்செய்துவிட்டேன்! இன்னும் அநேகாயிரம்கோக்களிருக்கின்றன! உமது கையிலிருக்குந்தண்டத்தை இங்கிருந்து சுற்றி எறியும் என்று தமது கோக்களிருக்குமிடத்தைக் காட்டினர். உடனே பிராம்மணன் தனக்கு அதிகங்கிடைக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் தனது கந்தல்வஸ்த்ரத்தை இறுக்கிக்கட்டி உடம்பை ஸரிப்படுத்திக்கொண்டு தண்டத்தைச் சுழற்றி எறிந்தார். அவர் சுழற்றி எறிந்த வேகம் 12 யோசனைநீளமும் 3 யோசனை யகலமுமுள்ள அயோத்யா நகரம்தாண்டி ஸரயூநதியையும்தாண்டி, ஸ்ரீராமனது கடைசிப்பசுவும் வ்ருஷபமுமிருக்குமிடத்தின்பக்கத்தில் வீழ்ந்தது. அத்தனை தூரம்வரையில் கோக்கள்மேய்ந்தனவானுல் எவ்வளவுகோக்களிருந்திருக்கவேண்டுமென்று ஊகித்தால் அறியலாம்.

இதைப்பார்த்ததும் ஸ்ரீராமனையுள்ளிட்ட அங்கிருந்த ஸகலரும், ப்ரம்மதேஜஸின்பலத்தை மிகுதியும் வியந்து கொண்டாடினுர்கள். ஸ்ரீ ராமனது ஆக்ஞையினுல் அத்தனைகோக்களும், அவற்றின் கறவைப் பாத்திரங்கள், இடையர்கள் அவர்களுக்கு ஸர்வமான்யங்கள் கட்டுத்

தறிகள், அவைகளுக்கு ஆகாரத்திற்குவேண்டிய ஆகாரச்செலவுத் தொகைமுதலியவற்றுடன் அவருடைய ஆசிரமங்கொண்டுசேர்க்கப் பெற்றன. ஸ்ரீ பகவானும் அவ்வளவுதூரம் கழிவீசியெறிந்ததைக்கண்டு ஆச்சரியப்பட்டு, அவரைக் கட்டிக்கொண்டு தனது அங்கஸங்கத்தைக் கொடுத்து ஆநந்தப்படுத்தினர். பகவான் பின்னும் த்ரிஜடரைநோக்கி, ஏதாவதுவேண்டுமா என்னலும் தபஸியாகிய தனக்குக் கோக்களைத் தவிர யாதொன்றும்வேண்டுவதில்லையென்றும், தனத்தினல் தனக்கு ஆகவேண்டியது யாதொன்றுமில்லையென்றும் கூறி, பகவானைவாழ்த்தித் தமது பத்நி குழந்தைகள்ஸஹிதமாய்த் தம்மிருப்பிடமாகிய வனத்தி லுள்ள ஆசிரமத்திற்கு விரைந்துசென்றார். த்ரிஜடரை இவ்வாறு கழி யெறிந்துவிடுக்கக் கேட்டமைக்காகப் பெரிதும் மன்னிக்கும்படி ஸ்ரீ பக வான் தமது பக்தனகிய த்ரிஜடரைக்கேட்டுக்கொள்ளுகையில், தான் ப்ரம்மதேஜோபலத்தைக்காட்டுமாறு அவ்வாறு செய்யச்சொன்னதே தவிர மற்றெவ்விதமான எண்ணமுங்கொண்டதாகவில்லையென்று த்ரி ஜடருக்குச் சொன்னதிலிருந்து, தசரதராமன்போன்றவர்களும் கீழாயி னோராயிருந்தாலும் அவர்களிடம் தம்முடைய மர்யாதையானஸ்வ பாவத்தையும் பணிவையும் காட்டுகிறார்களென்றறிகிறோம். பாகவதத்தி லுள்ள குசேலருக்கும் த்ரிஜடராகிய ராமாயணகுசேலருக்கும் ஒற் றுமைவித்யாஸங்களிருப்பினும் த்ரிஜடரைப் பலவிதங்களில் ராமாயண குசேலர் என்று சொல்வது தவருகாது.

வீ. சுப்பிரமணியஐயர்,

தமிழ்ப்பண்டிதர்,

மாயூரம்.

# பூர்வீக இந்தியர்களின் வியாபார ஊக்கம்.

## அன்னியதேசங்களுடன் வியாபாரம்.

ஹிந்துயூனிவர்ஸிடிக்கு அஸ்திவாரக்கல்நட்ட சம்பந்தமாக நடந்த பல பிரஸங்கங்களில், கனம் மிஸ்டர் லலுவாய் ஸமல்தாஸ் செய்தபிர சங்கம் ஒன்று. பண்டைக்காலத்தில் இந்தியாவில் வியாபாரவிஷய மாகச் செய்யப்பட்டுவந்தமுயற்சிகள் இவையென்று அந்தப்பிரசங்கத் தில் அவர் விவரமாக எடுத்துப்பேசினுர். பழையகாலத்தில் இந்தியர்கள் செய்துவந்தவியாபாரத்தைப்பற்றி இப்பொழுதுள்ளவர்களுக்கிருக்கும் அறியாமையைப்போக்க அவருடையபிரசங்கம் வெகு உபயோகமாக இருக்கும். அதன் ஸாராம்சத்தை இங்கு வெளிபிடுகிறோம்.

வெகுபூர்வகாலத்திலும், அதாவது வேதங்களேற்பட்டகாலமென்று சொல்லப்படுகிறகாலத்திலும் வியாபாரத்தையே குலதர்மமாக ஒரு ஜாதி கொண்டிருந்தது. இத்தேசவியாபாரிகள் பணத்தாசையினுல் அன்னியதேசங்களுக்குக் கப்பல்களை அனுப்பிவந்ததாகவும், இன்ன வியாபாரத்தைச்செய்கிறது, இன்னவியாபாரத்தைச் செய்கிறதில்லை யென்று கட்டுப்பட்டிராத வியாபாரிகள் இரவும் பகலும் ஓய்வின்றிப் பிரயாஸப்பட்டுவந்ததாகவும், லாபத்தை உத்தேசித்து அவர்கள் எங் கும் போய்வந்ததாகவும், அவர்கள் சஞ்சரிக்காதகடல்கள் இல்லையென்ப தாகவும், விற்பனைக்காலத்தில் சம்மதப்பட்டவிலை போதுமானதாயிருந் தாலு மில்லாவிட்டாலும் அதற்குக் கட்டுப்படவேண்டிய அவசியத்தை யறிந்து அப்படியே கட்டுப்பட்டுவந்தார்களென்றும், செல்வாக்குநாணய மாக நிஷ்கா என்ற பொன்காசுகளை உபயோகித்துவந்தார்களென்றும், ரிக்வேதத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதிலிருந்து, கப்பலோட்டும் தொழிலை அவர்கள் அறிந்திருந்தனரென்றும், தொழில் ஊக்கம்கொண் டவர்களென்றும், ஒப்பந்தத்துக்குக் கட்டுப்படவேண்டிய நியாயங்களை அவர்கள் அறிந்தவர்களென்றும், பொன்நாணயத்தின்விசேஷத்தை அறிந்திருந்தார்களென்றும் தெரிகிறது. ஆகையினுல் வியாபாரத்தினுல் தங்களுடையநிலைமையை விருத்திசெய்துகொள்ள இக்காலத்தில் மேனுட்டார்கருதுவதுபோலவே பழையகாலத்து ஹிந்துக்களும் கவலைப் பட்டுவந்ததாகத்தெரிகிறது. இக்காலத்தில் மேனுட்டுத் தனிகர்கள் ஆசைப்படுவதுபோலவே பழையகாலத்து வைசியர்கள் பிறர்வியாபா ரத்தைக் கைக்கொள்ளப்பார்த்தார்கள். உலகம்நெடுக எக்காலத்திலும்

மனுஷ்யசுபாவம் ஒரேமாதிரியாகத்தான் இருந்திருக்கிறது. பிறதேசங்களுடன் வியாபாரஞ்செய்வதற்குவேண்டிய கப்பல்கள்முதலிய சாதனங்கள் அக்காலத்திலிருந்ததல்லாமல், அவைகளைக்கொண்டு சாவதானமாக வியாபாரஞ்செய்யலாமென்றதைரியமும் வியாபாரிகளுக்கு இருந்திருக்கிறது. அம்மாதிரி தைரியமில்லாமல் வியாபாரம் பெருகியிருக்கமுடியாது. புராணங்களைக் கவனிப்போம். சுக்ரீவன் கடலிலுள்ள தீவுகளைச் சொல்லும்பொழுது, கோசகாக் என்ற தீவுகளைக் குறிப்பிடுகிறான். அது சீனுவாக இருக்கலாம். யவனத்வீபமென்றும், சுவர்ணத்வீபமென்றும் அடிக்கடி பிரஸ்தாபங்களைக் காணலாம்; அவை முறையே ஜாவாவாகவும், ஸுமட்ராவாகவும் இருந்திருக்கலாம். லோகித்ர ஸாகரம் என்று சொல்லப்பட்டிருக்கிற கடலானது இக்காலத்தில் 'செங்கடல்' என்று வழங்கும் கடலாகஇருக்கலாம். அக்காலத்திய ஹிந்துக்கள், இந்தியாவுக்குக் கிழக்குத்திக்கிலிருந்தநாடுகளை நன்கு அறிந்திருந்தார்களென்றும், அவைகளுடன் வியாபாரஞ்செய்துவந்தார்களென்றும், அங்கிருந்து அவர்கள்கொண்டுவந்த அதிசயமானசாமான்களைத் தங்கள்நாட்டு அரசருக்குக்காணிக்கையாகக்கொடுத்துவந்தார்களென்றும்தெரிகிறது. கடலின் அட்டகாசத்தால் வியாபாரிகள் கஷ்டப்பட்டதாக மகாபாரதத்திலும் சொல்லப்பட்டிருப்பதிலிருந்து அன்னியதேசவியாபாரம் பாரதமெழுதப்பட்டகாலத்திற்குமுன்னும் நடந்துவந்ததாகத்தெரிகிறது. ஆனால் வருஷந்தோறும்நடந்த அன்னியதேசவியாபாரத்தின் பெறுமானம் என்னவென்றுவது, எந்தெந்தத்தேசத்துடன் வியாபாரம் நடந்ததென்றுவது மேற்சொன்ன பிரஸ்தாபங்களிலிருந்து விளங்கவில்லை. இக்காலத்திற்போல் அக்காலத்திற் கணக்குகள் வெளியிடப்படவில்லையாயினும், அக்காலத்தில்நடந்த அன்னியவியாபாரத்தைப்பற்றிக் கிடைக்கும் எல்லாச்சமாசாரங்களையும், ராதாகுமுதமுகர்ஜி, இந்தியாவில் கப்பல்கட்டும்தொழில் என்றதம்முடையபுஸ்தகத்தில் திரட்டிவெளியிட்டிருக்கிறார். பண்டைக்காலநூல்களை ஆராய்ச்சிசெய்து அவரைப்போல் உழைக்கக் கல்விகற்றமாணவர்கள் முற்படுவது மிகவும் விரும்பத்தக்க விஷயம்.

வியாபாரியானவன் பிறதேசபாஷைகளை அறிந்திருக்கவேண்டிய அவசியத்தை இக்காலத்தில் மிக வற்புறுத்துகிறார்கள். வியாபாரப்படிப் பிற் பட்டம்பெற ஒரு அன்னியபாஷாஞானம் அவசியமாகவிருக்கிறது.

இந்த அவசியத்தை மனுவும் உணர்ந்து, வைசியனுனவன் மனுஷ்யஜாதி பேசும் எல்லாப்பாஷைகளையும் அறிந்திருத்தல் நல்லதென்று சொல்லியிருக்கிறார். ஒரு கப்பலின்சரக்கு, பழுதாய்விட்டால் அக்கப்பலிலுள்ள சிப்பந்திகள் எல்லோரும்சேர்ந்து ஜவாப்தாரி என்றும், தெய்வாதீனத்தால் பழுதாய்விட்டால் ஒருவரும் ஜவாப்தாரியல்லவென்றும் மனு, சொல்லியிருப்பதிலிருந்து, வியாபாரிகளுக்கும் கப்பற்காரர்களுக்கு மிக் காலத்தில் இருந்துவரும் சம்பந்தத்தை அக்காலத்திலும் அறிந்திருந்தார்களென்பது விளங்கும். சேதத்துக்கு மாலுமிகள் எல்லோரும் சேர்ந்து ஜவாப்தாரி என்று மனு, சொல்வதிலிருந்து அவர்கள் சொந்தக்காரர்களாகவுமிருந்திருக்கலாமென்று ஊகிக்க இடமுண்டாகிறது. கூட்டாய்த் தொழில்செய்யும்வரையில் ஜனங்கள் எவ்வளவு நாகரிகத்தில் முதிர்ந்திருந்தார்களென்றும் அதிலிருந்து நாம் அறியலாம்.

வேதத்திலும் புராணங்களிலும் வியாபாரத்தைப்பற்றிக் காணப்படும் பிரஸ்தாபங்களிலிருந்து நாம் என்ன ஊகிக்கலா மென்றவிஷயமாக அபிப்பிராயபேதமேற்படலாமாயினும், சந்திரகுப்தனுக்குமுந்தினகாலத்தில் இந்தியாவில் வியாபாரத்தின்நிலைமை எப்படி இருந்ததென்றவிஷயமாக மேனுட்டுவிற்பன்னர்கள் ஒருமனதாய் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

இந்தியாவுக்கும் பாபிலோன் என்ற நாட்டுக்கும் பூர்வத்தில் நடந்துவந்த வியாபாரத்தைப்பற்றி எழுதும்பொழுது மிஸ்டர் கேன்னடி என்ற ஆசிரியர் இன்றைக்கு 2500 வருஷங்களுக்குமுன் இரண்டுதேசங்களுக்கும் வியாபாரம் நடந்துவந்ததாகவும், 2300 வருஷங்களுக்குமுன் மும்முரமாக நடந்துவந்ததாகவும் ருஜு உளதென்று சொல்லுகிறார்.

இந்தியாவில், புத்தர்களிருந்தகாலத்தைப்பற்றி மிகவும் ஆராய்ச்சி செய்தவராகிய மிஸ்டர் ரிஸ் டேவிட்ஸ் என்ற வித்வானும் அப்படியே கருதுகிறார். இந்தியாவின் தென்மேற்குக்கரையிலிருந்து இன்ன சாமான்கள் ஏற்றுமதிசெய்யப்பட்டனவென்றும், இக்காலத்தில் ஸுபாராவென்றும் ப்ரோச் என்றும் வழங்கப்படும் துறைமுகங்களிலிருந்து

ஏற்றுமதி அதிகமாக நடந்ததென்றும், ஏற்றுமதி செய்யப்பட்ட பண்டங்களின்பெயர்கள் ஸம்ஸ்கிருதபாஷைச்சொற்கள் அல்லவென்றும் *தமிழ்ச்சொற்கள் என்றும் அவர் விவரமாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

"பம்பாய் கெஜட்டீர்" என்ற பத்திரிகையின் ஆசிரியராயிருந்த மிஸ்டர் ஜாக்ஸன், சுமார் 2900 வருஷங்களுக்கு முன் ப்ரோச், ஸூபார என்ற துறைமுகங்களின்வழியாக இந்தியாவுக்கும் பாபிலோன் நாட்டுக்கும் 300 வருஷகாலம் வியாபாரம் மும்முரமாக நடந்துவந்ததாகச் சொல்லியிருக்கிறார்.

## சந்திரகுப்தன்காலம்.

சந்திரகுப்தனுடையமந்திரியாயிருந்த வெகுகீர்த்திபெற்றவராகிய சாணக்யர் என்பவர் எழுதின அர்த்தசாஸ்திரத்தில் வியாபாரஅபிவிருத்தி நன்கு சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் சந்திரகுப்தன் இன்றைக்கு 2236 வருஷங்களுக்குமுன் பட்டத்துக்குவந்து 30 வருஷம் அரசாண்டவர். கப்பல் இலாக்காசபையொன்று தனியாக இருந்ததாகவும், அதற்கு அதிபதி ஒருவர் இருந்ததாகவும் சாணக்யர் சொல்லியிருப்பதிலிருந்து பலகப்பல்கள் இருந்ததாகத் தெரிகிறது. அன்னிய வியாபாரத்தைக் காக்கவேண்டியது கப்பல்சபையின் வேலையாக இருந்திருக்கவேண்டும்.

இந்தியாவுக்கும் அன்னியதேசங்களுக்கும் நடந்துவந்த வியாபாரத்தின்பலனாக, பல அன்னியர் தேசத்துக்குவந்ததால், அவர்களுக்கு ஜாகை ஏற்படுத்திக்கொடுக்கவும், பந்தோபஸ்துக்காகப் பாரா அனுப்பவும், வைத்தியஞ்செய்யவும் ஏற்பாடுசெய்வதற்காகத் தனியாக ஒரு சபை ஏற்படுத்தவேண்டியிருந்தது. அன்னியர் உயிருடன் இருந்தவரையில் அவர்களுக்கு ராஜாங்கத்தார் உதவிசெய்துவந்ததுடன், அவர்கள் இறந்துபோனபிறகு அவர்களுடைய ஐவேஜிகளை வசூல் செய்து ரொக்கமாக அவர்களுடைய உறவினர்களுக்கு அனுப்பியும்

---

* சுக்கானது அக்காலத்தில் இஞ்சிவேர் என்று வழங்கப்பட்டதாகவும், ஹீப்ருபாஷையில் அப்பெயர் இஞ்சிபேர் என்றாய், பிறகு லத்தீன்பாஷைமூலமாக ஜிஞ்செர் என்ற ஆங்கிலப்பெயர்வந்ததாகவும் காலஞ்சென்ற மிஸ்டர் கனகசபை சொல்லியிருக்கிறார். ப—ர்.

வந்தார்கள். நாவத்யக்ஷர் என்று ஒரு உத்யோகஸ்தர் புதிதாகநியமிக் கப்பட்டார். கப்பல்களின்சொந்தக்காரர்களிடமிருந்து தவறாமல் துறை முகத்தீர்வையை வசூல்செய்யவேண்டியது அவருடைய வேலை. கடல் கள், ஆறுகள், சுபாவமாக ஏற்பட்ட ஏரிகள், வெட்டப்பட்ட ஏரிகள் இவைகளிற் கப்பல்கள் சஞ்சரிப்பதைக் கண்காணிக்கவேண்டியது அவ ருடையகடமை. காற்றுக்குப் பயந்துகொண்டு துறைமுகத்துக்கு வரும் கப்பல்களுக்கு உதவிசெய்யவும், நீரினால்நனைந்து பழுதாய்விட்ட சாமான்களுக்குத் தீர்வையைத் தள்ளிக்கொடுக்கவும் அவருக்கு அதி காரமுண்டு.

வியாபாரத்தைக் கண்காணிக்க இன்னொருசபை ஏற்பட்டிருந் தது. இப்பொழுது இங்கிலாந்திலுள்ள வியாபாரசபைக்குள்ள அதி காரத்தைவிட அதற்கு அதிக அதிகாரம் ஏற்பட்டிருந்ததாகத் தெரி கிறது; எப்படியென்றால், முத்திரைபோட்ட தராசு படிகளை வியாபாரி கள் உபயோகிக்கும்படி அந்தச்சபையார் பார்த்துக்கொண்டதல்லாமல், வியாபாரத்தையும் கண்காணித்தார்கள். தொழில்களைக் கண்காணிக்க வும் ஒரு சபை இருந்தது. வெளித்தேசங்களுடன் இந்தியர் அக்காலத் தில் வியாபாரம்செய்துவந்ததல்லாமல், மதுரை, காசி முதலிய பெரிய உள்நாட்டுப்பட்டணங்களுடனும் வியாபாரம் செய்துவந்தார்கள். வியா பாரம் அதிக வியாபகமாகஇருந்ததால், வியாபாரசபைவேறு, தொழிற் சபைவேறு நியமிக்க அவசியமேற்பட்டது. 100 வருஷம் கும்பெனி யாரும் 50 வருஷம் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டாருமாக 150 வருஷம் ஆங்கிலேயர் இந்தியாவை யாண்டபிறகு, வியாபாரத்துக்கும் தொழி லுக்குமாகச் சேர்ந்து ஒரு தனி அதிகாரியை நியமித்தார்கள் என்பதை நாம் நினைப்பில் வைத்துக்கொண்டால்தான், ஆதிகாலத்தில்இருந்த ஏற் பாட்டின்விசேஷம் விளங்கும். 2200 வருஷங்களுக்குமுன் மோரிய வம்சசக்ரவர்த்திகள்காலத்தில் அன்னியதேசங்களுக்கும் இந்தியாவுக் கும் போக்குவரத்து, பலமாயிருந்ததென்றும், அன்னியர் பலர் வியா பாரத்தின்பொருட்டு அந்தராஜ்யத்தின் தலைநகருக்கு வந்துகொண்டிருந் தார்களென்றும் பலசபைகள் ஏற்பட்டிருந்தனவென்றும் விளங்குகிறது என்று மிஸ்டர் வின்சேண்ட் ஸ்மித் என்பவர் சொல்லியிருக்கிறார்.

பணக்காரர்களுடையபணத்தைக் கழித்துவிடவேண்டுமென்று சாணக்யர் சொல்லியிருப்பதிலிருந்து, வியாபாரத்தினால் பெரும்பணம்

குவிந்ததென்று விளங்குகிறது. இப்பொழுது மிஸ்டர் லாயிட்ஜார்ஜ் ஏற்படுத்தியிருப்பதுபோல், படிப்படியாக அவனவன் அந்தஸ்துக்குத் தக்கபடி வருமானவரிவிகிதத்தை உயர்த்திவசூலிக்கவேண்டுமென்று சாணக்யர்சொல்லியிருப்பதல்லாமல், பணங்கொடுக்கிறவர்களுக்குப் பட்டங்களைக்கொடுக்கலாமென்றும் வாய்கூசாமற் சொல்லியிருக்கிறார். நன்மையை உத்தேசித்து யார் தங்களுடையபொருளை அரசனுக்குக் கொடுத்துவிடுகிறார்களோ அவர்களுக்குக் குடை தலைப்பாகைமுதலிய ஏதேனும் ஒரு பிருதைக்கொடுக்கலாமென்று சாணக்யர் சொல்லியிருக்கிறார். இக்காலத்திற் சிலர் பட்டம்பெறுவதானது முற்காலத்தில் நடந்த மாதிரியாகவே இருக்கிறது.

## ரோமாபுரியுடன் வியாபாரம்.

சந்திரகுப்தனுடையபேரனாகிய அசோகமகாசக்கரவர்த்திகாலத்தில் முன்போல் அன்னியவியாபாரம் நடந்துவந்ததுடன், க்ரீஸ், ரோம், ஈஜிப்டு, சீனமுதலிய பலதேசங்களுடன் வியாபாரம் பலத்துவிட்டதாகவும் தெரிகிறது. ரோமாபுரியிலிருந்து வருஷாவருஷம் ரொக்கம் ஏராளமாக இந்தியாவுக்குப்போய்ச் சேர்ந்ததாக ப்ளினிமுதலிய பூர்வகாலத்து ஆசிரியர்கள் சொல்லியிருக்கிறார்கள். மிளகு, முத்து, மரகதம் ஆகிய மூன்று பண்டங்கள் தமிழ்நாட்டில்மாத்திரம் கிடைத்துவந்ததால், தமிழ் நாடுகள் அப்பண்டங்களைப் பெருவாரியாக ஏற்றுமதிசெய்தனவென்றும், தமிழ் அரசர்களிடத்தில் வெகு வல்லமையுள்ளகப்பல்கள் கூட்டங் கூட்டமாக இருந்தனவென்றும், மேனாட்டுவியாபாரிகள் தமிழ்நாட்டுப் பண்டங்களுக்குப் பதிலாகப் பொன்னையும் வெள்ளியையும் விசித்திரப் பண்டங்களையும் கொடுத்தார்களென்றும் வின்ஸெண்டு ஸ்மித் சொல்லியிருக்கிறார். இக்காலத்திற் கிராங்கனூர் என்று வழங்கும் முசிரியில் யவனர்களுடைய பெரியகப்பல்கள் மிளகு முத்து முதலியபண்டங்களை வாங்கி ஏற்றிக்கொண்டதாகச் சொல்லப்பட்டிருப்பதிலிருந்து மேனாட்டார் இந்தியாவிற் சரக்குகளைத் தாங்களேவாங்கித் தங்களுடையகப்பல்களிலேயே கொண்டுபோனார்களென்று தெரிகிறது. சிலசமயங்களில்

மேற்சொன்னபடிநடந்தாலும், இந்தியர்கள் தங்களுடைய சொந்தக் கப்பல்களில், பிறதேசங்களுக்குப்போய் வியாபாரம்செய்துவந்தார்களென்பதற்குப் பல ஆதாரங்கள் இருக்கின்றன. கிறிஸ்துபிறந்ததற்கு 77 வருஷம்முந்தி வியாபாரம் வெகுவாகப் பலமாய்விட்டதால் ரோமராஜ்யத்தின் செல்வவான்களுடைய டாம்பீகத்தால்வருஷமொன்றுக்கு அத்தேசத்திலிருந்து 10 கோடிபவுன் வெளிப்பட்டுவிட்டதாக ப்ளினி கோபித்துக்கொண்டு எழுதியிருக்கிறார். வடக்கிலும் தெற்கிலும் இப்படியே இருந்ததாகத் தெரிகிறது. இரண்டாவது சந்திரகுப்தன் சௌராஷ்டிர தேசத்தையும் மாளவதேசத்தையும் பிடித்துக்கொண்டதன்பலனாக விசேஷச் செல்வமும் செழிப்பும்பொருந்தியநாடுகளைப் பிடித்துக்கொண்டதல்லாமல், கிழக்குக்கரையோரத்திலுள்ள துறைமுகங்களுக்குப்போக வழியு முண்டாயிற்று. ஈஜிப்டுவழியாக ஐரோப்பாவுடன் நேராக வியாபாரம்செய்யவும் சந்திரகுப்தனுடைய ராஜ்யத்துக்குச் சௌகர்யமேற்பட்டது. ப்ரோச் என்று இக்காலத்திற் சொல்லப்படும் துறைமுகத்திலிருந்து இன்ன பண்டங்கள் ஏற்றுமதிசெய்யப்பட்டனவென்றும், அவை உள்நாட்டில் இந்தப்பட்டினங்களிலிருந்து துறைமுகப் பட்டினத்துக்குப் போயினவென்றும் பேரிப்ளிஸ் என்ற மேனாட்டுப் பூர்வீககிரந்தத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. மேற்குக் கரைத் துறைமுகங்கள் ஐரோப்பாவுடனும் கிழக்குக்கரைத் துறைமுகங்கள் ஸுமட்ரா, ஜாவா, சீனாவுடனும் வியாபாரம்செய்துவந்தன. குஜராத்திலிருந்துகூட கீழைத்தேசத்துடன் வியாபாரம்செய்ததாகத் தெரிகிறது. "ஜாவாவுக்குப்போனவன் திரும்பிவரமாட்டான்; வந்துவிட்டால் பல தலைமுறைகளுக்குக் காணும்படி சொத்துக்கொண்டுவருவான்" என்று குஜராத்திபாஷையில் ஒரு பழமொழி இருப்பதால், குஜராத்திலிருந்துபுறப்பட்டு இந்தியாவைச் சுற்றிக்கொண்டு கீழ்த்தேசங்களுக்குப்போவது கஷ்டமாயிருந்தாற்போலத் தெரிகிறது. பிரஸ்தாபகாலத்திற்குப்பிறகும் அநேகநூற்றாண்டுகள் ஆகும்வரையில் அன்னியதேசங்களுடன் இந்தியா வியாபாரம்செய்துவந்ததாகப் பிரமாணங்கள் இருக்கின்றன. பண்டைக்கால ஹிந்து ராஜ்யங்களின்சரித்திரங்களைப் படித்துப்பார்த்தால்தான் முற்காலப்பெருமை விளங்கும் என்று சொல்லி கனம் ஸமல்தாஸ் தம்முடைய பிரசங்கத்தை முடித்தார்.

---

(சுதேசமித்திரன்)

# புத்தகமதிப்புரை.

குமரவேள்மும்மணிக்கோவை:—இது, சிதம்பரம் ஸ்ரீசபாநாயகர் திருவனந்தல், காலைச்சந்திக்கட்டளை ஸ்ரீமத்-வே. தில்லைநாயகமுதலியாரவர்களால் ஆசிரியப்பா, வெண்பா, கலித்துறை என்னும் பாப் பாவினங்களால் அந்தாதியாய் மண்டலித்துமுடியும் அழகிய முப்பது செய்யுள்களையுடையதொரு பிரபந்தமாகப் பண்டையோர் மரபுபற்றியே பாடப்பெற்றுள்ளது. இதைப் படிப்பவர்களுக்கு இப்பிரபந்தத்தின் ஆக்கியோராகிய முதலியாரவர்கள், அருமையான தமிழிலக்கிய இலக்கணப்பயிற்சியும், செய்யுளியற்றுந்திறமையும், செவ்விதினமைந்தவர்களென்பதும் நன்கு புலனுரும். இதற்கு, சீர்காழி L. M. C. ஹைஸ்கூல் பண்டிதர் இராஜாப்பிள்ளையவர்களியற்றிய அருங்குறிப்பும் சேர்க்கப்பெற்றிருக்கிறது. இதன்விலை அணா 4. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப்பெறலாம்.

பத்திராதிபர்

# மாறனலங்காரம்.

இந்த அரியபெரிய அலங்காரநூல், மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரால் பதிப்பிக்கப்பெற்றது. தமிழறிஞர்கள் யாவருக்கும் பயன்படக்கூடியது. பிரிண்டிங்டிம்மி 8 பக்கம் கொண்டபாரம் 80 உள்ளது. நேர்த்தியான கலிகோபைண்டுசெய்யப்பெற்றிருக்கிறது. நல்லகாகிதத்திற் றெளிவான எழுத்திற் பதிக்கப்பெற்றது. தமிழ்மக்கள் யாவரும் வாங்கி உபயோகிக்குமாறு இதற்கு விலையும் சொற்பமாக (ரூ. 2—8—0) ஏற்படுத்தப்பெற்றிருக்கிறது. வேண்டுவோர் மதுரைத்தமிழ்ச்சங்கம் மானேஜருக்கு எழுதிப்பெறலாம்.

மானேஜர்.

மதுரைத் தமிழ்ச்சங்கம்.